# தமிழன்
THAMILAN தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

Follow us:

மலர் : 03, இதழ்: 118 சுபகிருது வருடம், கார்த்திகை மாதம் 19ஆம் திகதி திங்கட்கிழமை
(05.12.2022) ஹிஜ்ரி 1444, ஜமா அதுல் அவ்வல் - 10, 0115 886187 - பக்கங்கள் 10

விலை ரூ.60


**கமெண்ட் கந்தர்...**

ரணில் ஐயா பிரச்சினைகளை தீர்க்கிறாரோ இல்லையோ தீர்த்து வைக்கிறமாதிரி நல்லா பேசுறார்...



**உஷ்**



இலங்கையின் 75ஆவது சுதந்திர தினம் அடுத்த வருடம் அனுஷ்டிக்கப்படும்போது அதன் பிரதான நிகழ்வுக்கு முக்கியமான நாடுகளின் தலைவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அதில் கலந்துகொள்ள வருகை தருவதாக எகிப்து ஜனாதிபதி உறுதியளித்துள்ளார். இந்திய பிரதமருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. அதில் இந்திய ஜனாதிபதி கலந்துகொள்ள வருகை தரலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

இது தொடர்பான ஏற்பாடுகளை ஜனாதிபதி ரணில் நேரடியாகவே கையாள்வதாக சொல்லப்படுகிறது.

# மின், மருத்துவ சேவைகளை அத்தியாவசியமாக்கி விசேட வர்த்தமானி!

## ஜனாதிபதி ரணில் அறிவிப்பு

(நா.தினுஷா)

மின்சார விநியோகம் தொடர்பான அனைத்து சேவைகள், பெற்றோலிய உற்பத்திகள், எரிபொருள் வழங்கல் மற்றும் விநியோகம், சுகாதார சேவைகள் ஆகிய மூன்று விடயங்களும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் அத்தியாவசிய சேவைகளாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

இதுதொடர்பான வர்த்தமானி அறிவித்தல் நேற்று முன்தினம் (03) ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவினால் வெளியிடப்பட்டுள்ளது.

02 பக்கம்

# அடுத்த சுதந்திர தினத்தில் ஒரு தாய் மக்களாவோம்!



## சட்டத்தரணிகள் பங்களிப்பு அவசியமென ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

மக்களின் கவலைகளை கடந்த காலத்தை நோக்கி பின்தள்ளி போடுவதன் மூலம் 75ஆவது சுதந்திர தினத்தின்போதாவது நாட்டின் ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டை சீர்குலைக்கும் முயற்சிகளை தவிர்த்துக் கொள்ள முடியுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஏற்கனவே நாடாளுமன்ற உறுப்பினர்களிடையே கலந்துரையாடப்பட்டது போல நாட்டிலுள்ள சட்டத்தரணிகள் பங்களிப்புச் செய்தால் இந்த இலக்கை...

02 பக்கம்

# நிபுணர்கள் கூறுவதை மாத்திரம் கேட்டு தீர்மானங்களை எடுப்பது ஆபத்தானது!



## அரசாங்கம் மக்களுடனும் ஆலோசனை கலப்பது அவசியம் என்கிறார் பொருளியல் நிபுணர் தேவராஜன்

நிபுணர்கள் கூறுவதை மாத்திரம் கவனத்திற் கொள்ளாமல், மக்கள் கூறுபவற்றுக்கும் இலங்கை கூடுதலான அளவுக்கு செவிசாய்க்கவேண்டும் என்று கூறியிருக்கும் மூத்த பொருளியல் நிபுணரான பேராசிரியர் சாந்தா தேவராஜன் குடிமக்களின் கோரிக்கைகளை கவனத்தில் எடுக்காமல் தேசிய பொருளாதாரத்தின் உண்மையான பிரச்சினைகள் ஒரு போதும் தீர்க்கப்படப்போவதில்லை என்று எச்சரிக்கை செய்திருக்கிறார்.

பொறியியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனத்தினால் ஏற்பாடுசெய்யப்பட்ட பொருளாதார மீட்சிக்கான வழிவரைபடம் தொடர்பான சர்வதேச மாநாடொன்றில் கலந்துகொண்டு...

02 பக்கம்

# பெருந்தோட்டக் கம்பனிகள் தனியான காட்டு இராஜ்ஜியம்

## நாடாளுமன்றில் சாடினார் வடிவேல் சுரேஷ் எம்.பி.

(நா.தினுஷா)

பெருந்தோட்டங்கள் தற்போது அழிவடைந்து வருகின்றன. மனித உரிமை துன்புறுத்தல்களும் பெருந்தோட்ட பிரதேசங்களிலேயே அதிகளவில் இடம்பெற்று வருகின்றன. நாட்டிலுள்ள தொழில் சட்டதிட்டங்களுக்கு அப்பால் பெருந்தோட்டங்களில் கம்பனிகளால் தனியான சட்டதிட்டங்களே அமுல்படுத்தப்படுகின்றன. கம்பனிகள் மலையக பிரதேசங்களில் தனியான காட்டு இராஜ்ஜியத்தையே முன்னெடுத்து வருகின்றன. எனவே, தொழில் சட்டங்கள் மேலும் வலுப்படுத்தப்பட வேண்டும் என்று இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

02 பக்கம்

# 3 ஆம் தவணைக்காக அரச பாடசாலைகள் இன்று ஆரம்பம்

(கே.சுபானி)

அரச பாடசாலைகளில் மூன்றாம் தவணைக்கான கல்வி நடவடிக்கைகள் இன்று (05) ஆரம்பமாகவுள்ளன.

மூன்றாம் தவணை காலம் இன்றுமுதல் எதிர்வரும் 2023ஆம் ஆண்டு மார்ச் 24ஆம் திகதிவரை நடைபெறும் என கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

இதுகுறித்து கல்வியமைச்சு வெளியிட்டுள்ள சுற்றறிக்கையில்,


மூன்றாம் தவணை...

02 பக்கம்

# புதிதாக விமானங்களை கொள்வனவு செய்யும் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ்

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனம் குத்தகை அடிப்படையில் புதிதாக சில விமானங்களை கொள்வனவு செய்யவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

02 பக்கம்



# உழுந்து வடைக்குள் கரப்பான்பூச்சி

## யாழில் வாடிக்கையாளருக்கு காத்திருந்த அதிர்ச்சி

02 பக்கம்

# போலி முகவர் மட்டக்களப்பில் பொதுமக்களால் மடக்கிப்பிடிப்பு

## உதவியாளர்கள் மூவர் தப்பியோட்டம்

08 பக்கம்

# மாணவர்கள் மத்தியில் தீவிரமாக ஊடுருவியுள்ள போதைப்பொருள்

## அதிர்ச்சி தகவலை வெளியிட்ட புலனாய்வுப் பிரிவு

பாடசாலை மற்றும் பல்கலைக்கழகங்களில் ஐஸ் போதைப்பொருள் வேகமாக பரவியுள்ளதாக பொலிஸ் புலனாய்வுத் தகவல்கள்...

02 பக்கம்

# 400 வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனங்களின் உரிமம் இரத்து

சுற்றுலா விசாவில் ஆட்களை வெளிநாடுகளுக்கு அனுப்பி, அது தொடர்பான தகவல்களை சமர்ப்பிக்கத் தவறிய 400 வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனங்களின் உரிமம் இரத்து செய்யப்பட்டுள்ளதாக தொழில் அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

தொழில் மற்றும் வெளிநாட்டு அமைச்சின் விவகாரங்கள்...

02 பக்கம்






சிறிய, பெரிய அளவிலான வியாபாரங்களுக்கு குறைந்த வட்டிக் கடன்!

விவசாய, உற்பத்தி, சேவை மற்றும் வியாபார விற்பனைகளின் முதலீடு மற்றும் முகவர் நடவடிக்கையின் தேவைக்கமைய அதிகூடிய மீள்செலுத்தல் காலம்

ரூ.50 மில்லியன் வரை கடன் தொகையைப் பெறும் வசதி

வருடாந்த வட்டி வீதம் 6.5% முதல்

வருடாந்த முழு ஊதியம்

- ரூ.15 மில்லியன் வரை - 0112 481461 - ரூ.750 மில்லியன் வரை - 0112 481356

அல்லது அருகிலுள்ள கிளையை நாடுங்கள்.

*நிபந்தனைகள் உண்டு

www.peoplesbank.lk

1961 PEOPLE'S BANK CALL CENTRE

PEOPLE'S BANK

Pride of the Nation

AA- (lka) ஃபிட்ச் ரேட்டிங், AAA- பிராண்ட் ஃபினான்ஸ் ரேட்டிங்

மக்கள் வங்கியானது இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்டு, கண்காணிக்கப்படும் ஓர் வர்த்தக வங்கியாகும்.

# மஸ்கெலியா சப்த கன்னி சிகரத்தில் விமானம் விபத்துக்குள்ளாகி 48 வருடங்கள் நிறைவு

இலங்கையின் மஸ்கெலியா பிரதேசத்தில் அமைந்துள்ள சப்த கன்னி சிகரத்தில் விமானம் ஒன்று மோதி விபத்துக்குள்ளான சம்பவம் இடம்பெற்று நேற்றுடன் (04) 48 வருடங்கள் நிறைவடைகின்றன.


கடந்த அரை நூற்றாண்டில் இலங்கையில் இடம்பெற்ற மிக மோசமான அனர்த்தமாக இது கருதப்படுகிறது.

கடந்த 1974ஆம் ஆண்டு டிசம்பர் 4ஆம் திகதி மலேசியாவிலிருந்து மக்கா நோக்கி புனித யாத்திரை சென்ற யாத்திரிகர்களுடன் குறித்த விமானம் விபத்துக்குள்ளானது.

இந்த அசம்பாவிதத்தின்போது 191 பேரும் உயிரிழந்தனர்.

உலகையே உலுக்கிய இந்த அனர்த்தம் இலங்கையில் இடம்பெற்ற பாரிய அசம்பாவிதமாக வரலாற்றில் பதிவாகியுள்ளது. அக்காலத்தில் இந்தச் சம்பவம் உலகின் இரண்டாவது மோசமான விமான விபத்தாக கருதப்பட்டது.

விமான நிலையத்திற்கான தூரத்தை விமானிகள் தவறாகக் கணித்து, குறைந்தபட்ச பாதுகாப்பான உயரத்தை விட கீழே இறக்கியபோதே தரையுடன் மோதி விபத்துக்குள்ளானதாக விமான ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.






இந்த விமான விபத்தில் உயிரிழந்தவர்களில் பெரும்பாலானோர் இந்தோனேஷியர்களாவர். இதனை நினைவுகூரும் முகமாக விபத்து நடந்த இடத்திலிருந்து சற்று தொலைவில் நோட்டன் பிரிஜ் பகுதியில் ஒரு நினைவுச்சின்னம் உருவாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அம்பாறை மாவட்டத்தில் பல இடங்களில் பழுதடைந்த உருக்குலைந்த மீன்கள் பொதுமக்களுக்கு விற்பனை

*(வெல்லாவெளி நிருபர்)*

அம்பாறை மாவட்டத்தில் கல்முனை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பெரியநீலாவணை, மருதமுனை சந்தி, மருதமுனை, கல்முனை, பாண்டிருப்பு போன்ற பகுதிகளில் மனித பாவனைக்கு முரணான வகையில் பழுதடைந்த, தூர்நாற்றமுள்ள, உருக்குலைந்த நிலையில் காணப்பட்ட கடல்மீன்கள் குறைந்த விலையில் பொதுமக்களுக்கு விற்கப்பட்டு வருவதாக பிரதேச பொதுமக்கள், புத்திஜீவிகள், சமூக நிறுவனங்களின் பிரதிநிதிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.



குறிப்பாக, பல நாட்களாக பிடிக்கப்பட்ட கடல்மீன்களை விற்க முடியாமல் பாழடைந்த வீட்டில் வைத்து அவற்றை தூய நீரில் கழுவிவிட்டு, கடல்மண்ணை சேர்த்து பொதுமக்களுக்கு சூட்சுமமான முறையில் இவ்வாறு விற்பனை செய்து வருவதால் அதிகளவான நுகர்வோர் அல்லுண்டு மீன்களை வாங்கிச் செல்வதை அவதானிக்க முடிகின்றது.

தற்போது உடனுக்குடன் பிடிக்கப்படும் மீன்கள் ஒரு கிலோ பாரை மீன் 2,000 ரூபாவுக்கு விற்கப்படும் நிலையில் ஒருகிலோ சூரை மீன் 300 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது. இவ்வாறே பழுதடைந்த கணவாய் மீனும் கிலோ 600 ரூபாவுக்கு குறைந்த விலையில் விற்பனை செய்யப்படுகின்றது.

இவ்வாறான சுகாதார சீர்கேடுகள் உள்ள பழுதடைந்த மீன்களை பொதுமக்களுக்கு விற்பனை செய்வதால் பலர் சாப்பிட்டு உடல் ரீதியான உபாதைகளுக்கு முகங்கொடுத்துள்ளதாக பாதிக்கப்பட்டவர்கள் விசனம் தெரிவிக்கின்றார்கள்.

இவ்வாறானவர்களுக்கு எதிராக கிழக்கு மாகாண சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளர், கல்முனை பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி, கல்முனை சுகாதார வைத்திய அதிகாரி, பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், பிரதேசத்திற்கு பொறுப்பான பொலிஸார், இராணுவ கட்டளையிடும் அதிகாரிகள் போன்றோர் சட்ட நடவடிக்கை எடுக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை முன்வைப்பதோடு, பழுதடைந்த மீன்களைப் பிடித்து அதனை அழிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் வினயமாக கேட்டுக்கொள்கின்றார்கள்.

# புதுக்கடை நீதிமன்றத்தின் சான்றுப்பொருட்கள் களஞ்சியசாலையில் 44 பவுண் நகைகள் திருட்டு

கொழும்பு, புதுக்கடை நீதிமன்றத்தின் சான்றுப்பொருட்கள் களஞ்சியசாலையில் இரண்டு வழக்குகளுடன் தொடர்புடைய 44 பவுண் தங்க நகைகள் திருடப்பட்டமை தொடர்பில் வாழைத்தோட்டப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

வழக்கு சான்றுப் பொருட்களின் களஞ்சியசாலையில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் வாழைத்தோட்டப் பொலிஸில் செய்யப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் இந்த விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கொழும்பிலுள்ள இரண்டு பொலிஸ் நிலையங்களுடன் தொடர்பான வழக்கு சான்றுப்பொருட்கள் இந்தக் களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## மின், மருத்துவ...

அதற்கமைய, சுகாதார சேவைப்பிரிவுடன் தொடர்புடைய வைத்தியசாலைகள், நேர்சிங் ஹோம்ஸ், மருந்தகங்கள் மற்றும் அதுபோன்ற ஏனைய நிறுவனங்களில் நோயாளர்களின் பராமரிப்பு மற்றும் வரவேற்பு, பாதுகாப்பு, போசாக்கூட்டல் மற்றும் சிகிச்சை அளித்தல் ஆகியவை தொடர்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய அல்லது தேவைப்படும் எந்த வகையிலான சகல சேவைகள், வேலைகள் அல்லது தொழில் பங்களிப்புகள் என்பனவும் அத்தியாவசிய சேவைகளாக அறிவிக்கப்பட்டுள்ளன.

நாட்டின் தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் மேற்படி துறைகளில் வேலைநிறுத்தம் அல்லது பணிப்புறக்கணிப்பு போராட்டங்கள் ஏதும் நடக்குமாயின் அது மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்பதால் ஜனாதிபதி இந்த விசேட வர்த்தமானி அறிவித்தலை விடுத்ததாக அறிய முடிந்தது.

# ஹப்புத்தளையில் சுற்றுலாப் பயணிகள் மீது குளவிக்கொட்டு

*(நடராஜா மலர்வேந்தன்)*

ஹப்புத்தளை, தம்பேதன பகுதிக்கு சுற்றுலா வந்த 20 பேர் குளவிக்கொட்டுக்கு இலக்காகியுள்ளனர்.

மட்டக்களப்பு மற்றும் இரத்தினபுரி பகுதிகளைச் சேர்ந்த 20 பேரே இவ்வாறு குளவிக் கொட்டுக்கு இலக்காகி, ஹப்புத்தளை பங்கட்டி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நேற்று (04) முற்பகல் 11.30 மணியளவிலேயே இவ்வனர்த்தம் இடம்பெற்றுள்ளது.

8 பெண்கள், 10 ஆண்களும் மற்றும் இரு சிறார்கள் என மொத்தம் 20 பேர் வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

## 3ஆம் தவணைக்காக...

கல்வி நடவடிக்கைகளுக்கிடையே 2023ஆம் ஆண்டுக்கான க.பொ.த. உயர்தரப் பரீட்சைகள் நடைபெறவுள்ளன. இதற்காக பாடசாலை மாணவர்களுக்கு எதிர்வரும் ஜனவரி மாதம் விடுமுறை வழங்கப்படவுள்ளது.

இதேவேளை, இடைநிலை வகுப்புகளுக்கான மாணவர்களை சேர்க்கும் நடவடிக்கை இடம்பெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உழுந்து வடைக்குள்...

*(யாழ். செய்தியாளர்)*

யாழ். நகரில் பிரபல சைவ உணவகம் ஒன்றில் நேற்று (04) விற்கப்பட்ட வடையில் கரப்பான்பூச்சி காணப்பட்டமையால் குறித்த சைவ உணவகத்திற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணம் சிவன் கோவிலடியிலுள்ள உணவகம் ஒன்றில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவர் உழுந்து வடை ஒன்றை வாங்கியுள்ளார்.

அவர் வீட்டுக்குச் சென்று வடையை சாப்பிட்டபோது வடைக்குள் கரப்பான்பூச்சி இருப்பது அவதானிக்கப்பட்டு உடனடியாக குறித்த நபர் யாழ்ப்பாண மாநகர சபையின் சுகாதாரப் பரிசோதகர்களுக்கு அறிவித்துள்ளார்.

அதனடிப்படையில் யாழ்ப்பாண மாநகர சபையின் சுகாதாரப் பரிசோதகர்கள் உடனடியாக குறித்த உணவகத்துக்குச் சென்று பரிசோதித்ததோடு அதன் உரிமையாளருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாக குறிப்பிட்டனர்.

## 400 வெளிநாட்டு...

தொடர்பில் இன்று இடம்பெற்ற வரவு-செலவுத் திட்டம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இந்த விடயத்தைக் கூறினார்.

அத்துடன், நாட்டுக்கு அனுப்பப்படும் டொலரை உண்டியல் முறை மூலம் பெற்றுக்கொண்டு உரியவர்களுக்கு வழங்கும் நிறுவனங்களுக்கும் இடைக்காலத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனங்களுக்கு வழங்கப்படும் அனுமதிப் பத்திரத்திற்கான கட்டணமும் அதிகரிக்கப்படவுள்ளதாக தொழில் அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

## நிபுணர்கள்...

உரையாற்றும்போது பேராசிரியர் தேவராஜன் இவ்வாறு கூறினார்.

நாட்டு மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை ஆராய்வதற்கு ஆலோசனைக் குழுக்களையும் செயலணிகளையும் நியமிப்பதிலேயே கூடுதல் கவனத்தை செலுத்தி வந்திருக்கின்றன. அத்தகைய முயற்சிகள் கள யதார்த்தங்களை விளங்கிக்கொள்ளவும் சவால்களைக் கையாளவும் உதவவில்லை. குடிமக்களின் குரல் அலட்சியப்படுத்தப்படுவதே இதற்குக் காரணமாகும்.

மிக நீண்டகாலமாக இலங்கையின் பொருளாதாரக் கொள்கை ஒரு தொழில்நுட்பமான பிரச்சினையாகவே பார்க்கப்பட்டு வந்திருக்கிறது. நிபுணர்கள் குழுவொன்றை நியமித்து அறையொன்றுக்குள் இருந்து ஆராயுமாறு கேட்டுக்கொண்டால் எல்லாம் சரியாகிவிடும் என்ற சிந்தனையே இருக்கிறது.

அவர்கள் சாத்தியமான சகல பொருளாதாரக் கொள்கைகளையும் வகுப்பார்கள். அதுவே பிரச்சினையாக இருக்கிறது. மக்கள் கூறுவதை கவனத்தில் எடுக்கின்ற கொள்கைவகுப்பு செயன்முறையே தேவை. மக்கள் உண்மையில் முக்கியமான சில விடயங்களைக் கூறுகின்றார்கள்

பெரும்பாலான சந்தர்ப்பங்களில் நிபுணர்கள் சாதாரண மக்களினால் எதிர்நோக்கப்படும் பிரச்சினைகளையும் கள யதார்த்தங்களையும் புரிந்துகொள்ள இயலாதவர்களாக இருப்பதால் அவர்கள் கூறுவதை மாத்திரம் கேட்டுக்கொண்டு கொள்கைத் தீர்மானங்களை எடுப்பது ஆபத்தானது என்று அவர் எச்சரிக்கை செய்தார்.

உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியம் போன்ற நிறுவனங்களுடன் ஆலோசனை கலப்பது முக்கியமானது என்கிற அதேவேளை, மக்களுடன் ஆலோசிப்பதற்கும் அவசியமான முயற்சிகளை அதிகாரிகள் எடுக்கவேண்டும்.

அத்தகைய முயற்சிகள் எடுக்கப்படுவதோ அவற்றுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுவதோ மிக அரிது என்று கூறிய பேராசிரியர் தேவராஜன், மக்களின் கருத்துகள் கவனத்தில் எடுக்கப்படாத ஒரு சந்தர்ப்பத்துக்கான உதாரணமாக 2023 பட்ஜெட்டை சுட்டிக்காட்டினார்.

சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெறுவதற்குத் தேவையான வரிச் சீர்திருத்தங்களைப் பொறுத்தவரை சரியான முயற்சிகளில் பட்ஜெட் குறிப்பான கவனத்தை செலுத்தியிருந்தாலும், அடிப்படையான அரசியல் பிரச்சினைகளுக்கு தொடரான தொழில்நுட்பமான தீர்வுகளை அது கொண்டிருக்கிறது. முன்னோக்கிச் செல்லவேண்டுமானால் அதை தவிர்க்கவேண்டியிருக்கும். கொள்கை வகுப்பாளர்கள் மக்களுக்கு பொறுப்புக்கூற வேண்டியவர்களாக இருப்பது அவசியம். அதுவே சரியான ஜனநாயகமாகும் என்று அவர் கூறினார்.

## பெருந்தோட்டக் கம்பனிகள்...

2023 ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் குழுநிலை விவாதம் நேற்று முன்தினம் (03) நாடாளுமன்றத்தில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

மலையகச் சமூகம் நாட்டுக்கான டொலர்களை பெற்றுக்கொடுப்பதற்காக தம்மை அர்ப்பணித்துள்ளது. பெருந்தோட்டங்களைச் சேர்ந்த பெண்களும் பணிப்பெண்களாக வெளிநாடுகளுக்கு சென்றுகொண்டிருக்கிறார்கள். ஆனால், அவர்களுக்கான தொழில் பாதுகாப்பு மிகவும் கேள்விக்குறியாக இருக்கிறது. அதற்குக் காரணம், முகவர்களுக்கு தரகர்களாக செயற்படுபவர்கள் சட்டத்துக்கு அப்பால் சென்று மலையகப் பெண்களை ஏமாற்றி, அவர்களை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தினூடாக அல்லாமல் சட்டவிரோதமாக வெளிநாடுகளுக்கு அனுப்புகிறார்கள். இவ்வாறு அங்கு செல்பவர்கள் இன்னோரன்ன பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருகிறார்கள். பலர் தமது உயிரை மாய்த்து இருக்கிறார்கள். மேலும் சிலர் உயிரிழந்திருக்கிறார்கள். இதுதொடர்பிலும் தொழில் அமைச்சர் சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும்.

பெருந்தோட்ட மக்களைப் பொறுத்தவரையில், அவர்களின் தொழில் பாதுகாப்பு, சம்பளம் மற்றும் நாட்டிலிலுள்ள தொழில் சட்டங்கள் என்பன அவர்களுக்காக அமுல்படுத்தப்படுவதில்லை. 25 மாவட்டங்களில் 10 மாவட்டங்கள் பெருந்தோட்டங்களாக இருக்கின்றன. இந்த 10 மாவட்டங்களிலிருக்கும் தோட்டங்கள் வெறுமனே நான்கு பிரிவினருக்கு மாத்திரமே ஒப்படைக்கப்பட்டுள்ளன. அரசாங்கத்தால் செய்யமுடியாத பெருந்தோட்டங்களை 22 கம்பனிகளுக்கு ஒப்படைத்துள்ளார்கள். இந்த 22 கம்பனிகளுக்கும் நால்வர் மாத்திரமே உரிமையாளர்களாக இருக்கிறார்கள்.

இவர்கள் நால்வரும் நாட்டின் தொழில் சட்டங்களை மீறியே செயற்பட்டு வருகிறார்கள். தொழில் சட்டங்கள் பெறுந்தோட்ட மக்களுக்கும் அமுல்படுத்தப்படுகிறதா அல்லது பெருந்தோட்டங்களுக்காக மாத்திரம் தொழில் சட்டங்கள் மாற்றப்பட்டுள்ளனவா என்பது தொடர்பில் எங்களுக்கு தெளிவுவேண்டும். முழுமையாக சட்டத்துக்குப் புறம்பாகவே செயற்படுகிறார்கள்.

பெருந்தோட்டங்களில் 75 சதவீதமானவர்கள் பெண்களே தொழில்புரிகிறார்கள். கட்டாயம் நாட்டில் C190 நடைமுறைப்படுத்தப் பட வேண்டும். காரணம், இந்த பெருந்தோட்டப் பிரதேசங்களிலேயே அதிகளவு துன்புறுத்தல்கள் இடம்பெறுகின்றன. ஹேலிஸ் நிறுவனமே அதிகளவு துன்புறுத்தல்களை முன்னெடுத்து வருகிறது.

ரொஷான் இராஜதுரையினால் தனியான மாப்பியா முன்னெடுக்கப்படுகின்றது. பெருந்தோட்டத்தில் அவர் தனியாக அரசாங்கமொன்றையே முன்னெடுத்து வருகிறார். இதற்கு இடமளிக்க முடியாது. தம்மிக்க பெரேராவுக்கும் ஹரி ஜயவர்தனவுக்கும் தனியான தொழில் சட்டங்கள் வழங்கப்பட்டுள்ளனவா என்பது குறித்து விளக்கமளிக்க வேண்டும். தனியான அமைச்சொன்றை அமைச்சு முறையான செயன்முறைகள் முன்னெடுத்து வரும் சந்தர்ப்பத்தில் இவர்கள் தனியான இராச்சியத்தையே அந்தப் பிரதேசங்களில் முன்னெடுத்து வருகிறார்கள்.

சுகாதார பாதுகாப்பின்மை, பெண் துன்புறுத்தல்கள், மனித துன்புறுத்தல்கள் என அனைத்தும் பெருந்தோட்டங்களிலேயே இடம்பெறுகின்றன. தற்போதுள்ள நிலைமையில் ஆயிரம் ரூபாவை வைத்து வாழ முடியுமா? அந்த ஆயிரம் ரூபாவை பெற்றுக்கொடுக்கவும் பல்வேறு விதிமுறைகளை விதித்தார்கள். தற்போது தொழிற்சங்களையும் ஓரங்கட்டிவிட்டார்கள்.

தற்போதைய நிலைமைகளுக்கமைய சாதாரண பெருந்தோட்டக் குடும்பமொன்று தனது வாழ்வாதாரத்தை முன்னெடுக்க நாளொன்றுக்கு 3 ஆயிரத்து 750 ரூபா அவசியமாகும். இதனை சகல தொழிற்சங்கங்களும் ஏற்றுக்கொள்கின்றன. சம்பள நிர்ணய சபை அல்லது கூட்டு ஒப்பந்தத்தினூடாகவேனும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். கடந்த காலங்களில் கூட்டு ஒப்பந்தம் தவறான முறையில் முன்னெடுக்கப்பட்டுள்ளது. தற்போது அது மறுசீரமைக்கப்பட்டு புதிய முறையில் முன்னெடுக்கப்படுமாக இருந்தால் அதற்கு ஒத்துழைப்பு வழங்க நாங்கள் தயாராக இருக்கிறோம்.

இதுதொடர்பில் தற்போதைய தொழில் அமைச்சர் நடவடிக்கை எடுக்கவேண்டும். இல்லையென்றால் கடந்தகாலங்களை போன்று இந்தப் பிரச்சினைகள் மேலும் இழுத்தடிக்கப்படும். சகல பெருந்தோட்டத் தொழிற்சாலைகளும் மூடப்பட்டு வருகின்றன. இனிமேலும் பொறுத்திருக்க முடியாது. இனிமேலாவது முறையான நடவடிக்கை எடுக்க வேண்டும். பெருந்தோட்டத் தொழிற்சங்க கலந்துரையாடல்கள் இன்று பொலிஸ் நிலையங்களிலேயே இடம்பெறுகின்றன. பெருந்தோட்ட மக்கள் மீதான துன்புறுத்தல்கள் நிறுத்தப்பட வேண்டும். அவர்களுக்கான சுதந்திரம் வழங்கப்பட வேண்டும் - என்றார்.

## மாணவர்கள்...

வெளியாகியுள்ளன.

8ஆம் வகுப்புமுதல் உயர்தரம் வரையில் கல்வி பயிலும் மாணவர்கள் சிலரும், பல்கலைக்கழக மருத்துவ, பொறியியல் பீடங்களில் பயிலும் இளைஞர்கள் சிலரும் ஐஸ் போதைப் பொருளுக்கு அடிமையாகி இருப்பது தெரியவந்துள்ளது.

ஐஸ் குடித்தால் உறக்கம் வராது எனவும் இதனால் இரவில் படிக்க முடியும் என்ற தவறான எண்ணமுமே இதனை மாணவர்கள் பயன்படுத்த முக்கிய காரணம் என புலனாய்வு அமைப்புகள் தெரிவிக்கின்றன.

போதைப்பொருள் கடத்தல்காரர்கள் முதலில் பாடசாலை அளவில் மாணவர்களுக்கு கடனுக்கு மேற்படி போதைப்பொருளை வழங்குகின்றனர். மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் அதற்குப் பின்னர் அடிமையான பிறகு, கடனை அடைக்க சிறுவர்களை ஐஸ் போதைப்பொருளை விற்க வைப்பதையும் புலனாய்வு அமைப்புகள் கண்டுபிடித்துள்ளன.

சில வழிபாட்டுத் தலங்களின் மதகுருமார்கள், சில பொலிஸ் அதிகாரிகள், பாதுகாப்புப் படையைச் சேர்ந்த சிலர் ஐஸ் போதைப்பொருள் பழக்கத்திற்குள்ளாகி உள்ளதாக புலனாய்வு அமைப்புகளின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

கடந்த காலங்களில் பாரியளவில் ஹெரோயின் கடத்தலில் ஈடுபட்டவர்கள் தற்போது ஐஸ் போதைப்பொருள் கடத்தலுக்கு மாறியுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

குறிப்பாக, கடந்த காலங்களில் பல பொலிஸ் அதிகாரிகள் ஐஸ் போதைப்பொருளுடன் பிடிபட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

## புதிதாக விமானங்களை...

அந்தவகையில், நஷ்டத்தில் இயங்கும் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் சேவைக்கு மேலும் 11 புதிய விமானங்களை குத்தகை முறையின் கீழ் பெற்றுக்கொடுக்க திட்டமிடப்பட்டுள்ளதாக விமான நிறுவனத்தின் தலைவர் அசோக் பத்திரகே தெரிவித்துள்ளார்.

இதேவேளை, குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள விமானங்களின் காலம் நிறைவடைகின்றமையினால் அமைச்சரவை அனுமதியுடன் புதிதாக குத்தகை அடிப்படையில் விமானங்களை கொள்வனவு செய்யவுள்ளதாக துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு அடுத்த மூன்று மாதங்களில் அதிகளவான சுற்றுலாப் பயணிகள் வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்படுவதால் சிறப்பான சேவையை வழங்கவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அடுத்த சுதந்திர...

அடைய முடியுமென்றும் ஜனாதிபதி நம்பிக்கை வெளியிட்டார்.

மேலும், இது எளிதான விடயம் அல்லாத போதும் சாதிக்க முடியாத விடயம் என்பதற்கில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன், அரசியல்வாதிகளால் மட்டும் இதனை சாதிக்க முடியாது என்றும் இதற்கு சட்டத்தரணிகளின் ஒத்துழைப்பு அவசியம் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

ரணில் விக்கிரமசிங்க சட்டத்தரணியாகி 50 வருடங்கள் பூர்த்தியாகியுள்ள நிலையில் சட்டத்தரணிகள் சங்கத்தினால் நேற்று முன்தினம் (03) இரவு ஷங்கிரிலா ஹோட்டலிலுள்ள லோட்டஸ் மண்டபத்தில் ஏற்பாடு செய்திருந்த ஜனாதிபதிக்கான கௌரவிப்பு நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஒட்டுமொத்த அமைப்பு முறையும் இளைய தலைமுறையினரால் கேள்விக்குட்படுத்தப்படும்போது நாம் அனைவரும் சவாலுக்குள்ளாக நேரிடுகிறது. இது பொருளாதார சவாலிலும் பார்க்க பாரதுரமானது என்றும் அவர் தெரிவித்தார்.

கடந்தகால காயங்களை ஆற்றுவதா அல்லது அதனை மேலும் வளரவிடுவதா என தீர்மானிப்பதற்கான சந்தர்ப்பம் தற்போது நாட்டுக்கு கிடைத்துள்ளது.

நாட்டின் ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டை சீர்குலைக்காமல் இன, மத வேறுபாடு மற்றும் மக்களின் சில யதார்த்தமான கவலைகளால் எழுந்துள்ள பிரச்சினைகளுக்கு எவ்வாறு தீர்வு காண்பது என்பது தொடர்பில் ஆராய்வதற்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தீர்மானித்துள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டிலுள்ள அனைத்து சட்டத்தரணிகளும் ஒன்றுசேர்ந்தால் அனைத்து பாரிய பிரச்சினைகளையும் பின்தள்ளிவிட்டு 75ஆவது சுதந்திர தின நிகழ்வின்போது நாம் அனைவரும் ஒரு தாய் மக்களாக முடியுமென்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இது தத்தமது கருத்துகளுக்கு வரவேற்பளிப்பதற்கும் மக்கள் அனுபவிக்கும் சுதந்திரத்தை உள்ளடக்கிய அரசியலமைப்பொன்றை தயாரிப்பதற்கும் அதேவேளை, அரசியலமைப்புக்குட்பட்ட அரசாங்கமொன்றை முன்னெடுத்துச் செல்வதற்கும் வழிவகுக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் முதற் பெண்மணி தலைமை பேராசிரியர் மைத்ரி விக்கிரமசிங்கவுக்கும் ஜனாதிபதி சட்டத்தரணி ரொனால்ட் பெரேராவினால் மகத்தான வரவேற்பளிக்கப்பட்டது.

# பணியாற்றும் நிறுவனத்தில் கடும் அழுத்தமெனத் தெரிவித்து உயிரை மாய்த்துக் கொண்ட இளைஞன்



பணியிடத்தில் ஏற்பட்ட அழுத்தத்தைத் தாங்க முடியாமல் இளைஞர் ஒருவர் உயிரை மாய்த்துக் கொண்டதாக சமூக வலைத்தளங்களில் தகவல் பரவி வருகிறது.

தனமல்வில பகுதியைச் சேர்ந்த மிஹிரன் சதுரங்க என்பவர் தகவல் தொழில்நுட்ப நிறுவனமொன்றில் பணிபுரிந்து வந்துள்ளார்.

பணியிலிருந்து விலக பல தடவைகள் விண்ணப்பித்தும் நிர்வாகம் அனுமதிக்காததால் அவர் தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

உயிரிழப்பதற்கு முன்னர் அவர் கடிதம் ஒன்றையும் எழுதி வைத்துவிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார் என்று தெரியவந்துள்ளது.

தனது தாயார் சுகயீனமாக இருப்பதால் அவரை பராமரித்துக் கொள்வதற்கு நேரம் கேட்டு பல முறை அலுவலகத்திற்கு இந்த இளைஞன் மின்னஞ்சல் அனுப்பியுள்ளார். எனினும், நிறுவனம் அதனைக் கண்டுகொள்ளவில்லையென சொல்லப்படுகிறது.

காலை 8.30 மணி முதல் மாலை 6 மணி வரை வேலை செய்வதற்கு முயற்சிப்பதாகவும் மின்சாரம் தடைப்பட்ட நேரங்களில் உட்பட பணியாற்றியதாகவும் அவர் தற்கொலைக்கு முன்னர் எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

தனது பிரச்சினைகளை பற்றி பேசுவதற்கு நேரம் வழங்குமாறும் கோரியுள்ளார். எனினும், அவரது மின்னஞ்சல்களுக்கு நிறுவனம் சார்பில் இருந்து எந்த பதிலும் கிடைக்கவில்லை என தகவல் வெளியாகியுள்ளது.

இறுதியில் பணி அழுத்தத்தைத் தாங்கிக் கொள்ள முடியாமல் அவர் தற்கொலை செய்து கொண்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

இந்நிலையில், இந்த இளைஞனின் மரணத்திற்கு காரணமாக அந்த நிறுவனத்தின் மீது பலரும் தங்கள் எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றனர்.

குறிப்பு - தற்கொலை எண்ணம் பிரச்சினைக்கு தீர்வல்ல. உளநல தீர்வுக்கு 1926 என்ற இலக்கத்திற்கு அழைக்கவும்.

# மன்னார் முள்ளிக்குளம் காற்றாலை மின்னுற்பத்தித் திட்டம் தாமதமாகும்

## வெளியானது புதிய தகவல்

மன்னாரில் உள்ள முள்ளிக்குளத்தில் இலங்கை மின்சார சபையினால் நிர்மாணிக்கப்படவுள்ள உத்தேச 34 டேர்பைன் காற்றாலை மின்சார நிலையப் பணிகள் தாமதமாகும் என்று அறிவிக்கப் பட்டுள்ளது.

இத்திட்டம் தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையில், அந்தப் பகுதியின் வளமான பறவை இனங்கள் மற்றும் புலம்பெயர் பறவையினங்கள் மீது, குறித்த மின்சார நிலையத் திட்டம், தாக்கத்தை ஏற்படுத்துமா என்பதை ஆராயுமாறு கோரப்பட்டுள்ளது. இதனையடுத்தே இத்திட்டப்பணிகள் தாமதமாகவுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

காற்றாலைகளிலிருந்து எழும் இயக்கங்களால் பறவைகள் மற்றும் வௌவால்கள் போன்றவற்றுக்கு மரணம் ஏற்படுவதுடன், காயங்களுக்கும் வழிவகுக்கும் என்று அந்த அறிக்கை சுட்டிக் காட்டியுள்ளது. இத்திட்டம் காரணமாக 83 பறவையினங்கள் பாதிக்கப்படும் என்று அறிக்கையில் கூறப்பட் டுள்ளது.

இதேவேளை, இத்திட்டம் தொடர்பானகள ஆய்வுகள் ஒரு குறுகிய காலத்திற்குள் மட்டுமே மேற்கொள்ளப்பட்டன. எனவே, இதனை மையப்படுத்தி குறைந்தபட்சம் ஒரு வருட ஆய்வு நடத்தப்படவேண்டும் என்று சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

புலம்பெயர்ந்த பறவைகள் பல நுழைவுப் பாதைகள் வழியாக இலங்கையை அடைகின்றன. மன்னார் பிராந்தியத்தில் ஒரு முக்கிய நுழைவுப் புள்ளி உள்ளது. அதேபோல், பருவத்தின் முடிவில் நாட்டை விட்டு வெளியேறும் போதும் அந்தப் பறவைகள், மன்னார் பகுதியை தங்கள் கடைசி நிலைப் புள்ளியாகப் பயன்படுத்துகின்றன என்று சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வீதியில் கேக் வெட்டி மருத்துவரின் கடமைக்கு இடையூறு விளைவிப்பு

# யாழில் 10 இளைஞர்கள் கைது

(யாழ் நிருபர்)

தெல்லிப்பளை வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரியின் கடமைக்கு இடையூறு விளைவித்து, வீதியில் கேக் வெட்டிய குற்றச்சாட்டில் 10 இளைஞர்களை கோப்பாய் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது,

கோப்பாய் பகுதியில் வசிக்கும் குறித்த சட்ட வைத்திய அதிகாரி தனது கடமையின் நிமித்தம் சனிக்கிழமை நள்ளிரவு 12 மணியளவில் காரில் சென்று கொண்டிருந்த வேளை, கோப்பாய் நாவலர் பாடசாலை முன்பாக வீதியை மறித்து மோட்டார் சைக்கிளில் நின்ற இளைஞர்கள் குழுவொன்று பிறந்தநாள் தினத்தைக் கொண்டாடிய வண்ணம் இருந்துள்ளது. இளைஞர்கள் குழுவின் பிறந்தநாள் கொண்டாட்டத்தினால், அவ்வீதியூடான போக்குவரத்து முற்றாக தடைப்பட்டு இருந்தது. அதனால் சட்ட வைத்திய அதிகாரி தனது கடமைக்கு செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டமையால், அது தொடர்பில் கோப்பாய் பொலிஸாருக்கு அறிவித்துள்ளார்.

சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் அங்கு கொண்டாட்டத்தில் ஈடுபட்டிருந்த 10 இளைஞர்களை கைதுசெய்ததுடன், அங்கு நின்ற இரண்டு மோட்டார் சைக்கிள்களையும் கைப்பற்றினர்.

இதேவேளை கைதுசெய்யப்பட்ட 10 இளைஞர்களையும் எதிர்வரும் 15ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்ப்பாண நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் நேற்று உத்தரவிட்டுள்ளார்.

# சிவனொளிபாதமலை பருவ காலத்தையொட்டி மஸ்கெலியா - நல்லதண்ணி வீதியில் சிரமதானம்





(செ.தி.பெருமாள்)

மஸ்கெலியா எரிபொருள் நிரப்பும் நிலைய பகுதியிலிருந்து நல்லதண்ணி வரையுள்ள பிரதான வீதியிலுள்ள அனைத்து குப்பைகளையும் அகற்றும் சிரமதானப் பணி ஒன்றை சமூக ஆர்வலர்கள் மற்றும் பொலிஸார், அதிரடிப் படையினர், கிராம உத்தியோகத்தர்கள், சுகாதாரப் பிரிவினர் தோட்டத் தொழிலாளர்கள் ஆகியோர் நேற்று மேற்கொண்டனர்.

மஸ்கெலியா பிரதேச சபையின் தலைவர் மற்றும் மஸ்கெலியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி யசரத்ன பண்டார ஆகியோரின் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

உக்கும் மற்றும் உக்கா குப்பைகள் அகற்றப்பட்டு அவையனைத்தையும் மஸ்கெலியா பிரதேச சபையின் கழிவுப் பொருட்கள் சேகரிக்கும் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

இச்சேவைக்கு புரவுன்லோ கிராம அபிவிருத்தி சங்கம் முழுமையான ஒத்துழைப்பை வழங்கியது.

## இலங்கை தமிழரசுக் கட்சியின் மத்திய குழு 11ஆம் திகதி கூடும்

இலங்கை தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் எதிர்வரும் 11ஆம் திகதி நடைபெறவுள்ளது. வவுனியாவிலுள்ள கட்சி அலுவலகத்தில் காலைவேளையில் கூட்டம் ஆரம்பிக்கவுள்ளது.

கூட்ட நிகழ்ச்சி நிரலில், உள்ளூராட்சி நிறுவனங்களின் தொகுதிகளை வரையறுத்தல் தொடர்பாக எல்லை நிர்ணயக்குழுவிற்கு சமர்ப்பிக்க வேண்டிய அறிக்கை பற்றித் தீர்மானித்தல், தேசிய பிரச்சனைக்கான தீர்வு மற்றும் தீர்வுத்திட்டம் பற்றி கட்சியின் நிலைப்பாட்டை ஆராய்தல், மறுசீரமைக்கப்பட்ட கட்சியின் யாப்பை பொதுச்சபையின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிப்பது உள்ளிட்ட விடயங்களை ஆராயவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கூரிய ஆயுதங்களுடன் அறுவர் வெல்லம்பிட்டியவில் கைது



(பிர்தௌஸ்)

கூரிய ஆயுதங்கள் மற்றும் போதைப் பொருட்களுடன் சந்தேக நபர்கள் ஆறு பேரை வெல்லம்பிட்டிய பகுதியிலுள்ள வீடொன்றில் வைத்து பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் கைதுசெய்துள்ளனர்.

விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைத்த தகவலொன்றுக்கமைய நேற்று (4) வெல்லம்பிட்டிய பொலிஸ் பிரிவிலுள்ள கித்தம்பகுவ பகுதியில் நடத்திய சுற்றிவளைப்பின் போது குற்றச் செயலொன்றை செய்வதற்காக வேண்டி ஆயத்தமாகிக் கொண்டிருந்த சந்தேக நபர்கள் ஆறு பேரை கைதுசெய்துள்ளதுடன், இரண்டு வாள்களையும் இரண்டு கத்திகளையும் இன்னும் சில கூரிய ஆயுதங்களையும் 720 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருட்களையும் விசேட அதிரடிப்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் 27 வயதுக்கும் 31 வயதுக்கும் இடைப்பட்ட வெல்லம்பிட்டிய, மத்தள, கொலன்னாவ ஆகிய பகுதிகளை வசிப்பிடமாக கொண்டவர்கள் என்பது ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

மேலதிக விசாரணைகளை மேற்கொள்வதற்காக சந்தேக நபர்கள் ஆறுபேரையும் ஆயுதங்களையும் அதிரடிப்படையினர் வெல்லம்பிட்டிய பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர். மேலதிக விசாரணைகளை வெல்லம்பிட்டிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

# 'பாதீனிய ஒழிப்பு இயக்கம்' எனும் பெயரில் செயற்றிட்ட அமைப்பு யாழில் உருவாக்கம்



'சிறகுகள்' அமைப்பு ஏற்பாடு செய்த அனைத்துலக மண் தினம் பற்றிய கலந்துரையாடலும் பாதீனியம் ஒழிப்பு தொடர்பான விழிப்புணர்வு செயற்றிட்டத்தை அங்குரார்ப்பணம் செய்யும் கலந்துரையாடலானது பலாலி வீதி கோண்டாவிலில் அமைந்துள்ள எழுதிரள் பணிமனையில் நேற்றுக் காலை 9 மணிமுதல் நண்பகல் 12 மணி வரை இடம்பெற்றது.

இதில் முன்னாள் வடமாகாண விவசாயத்துறை அமைச்சரும் தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவருமான ஐங்கரநேசன், பல்வேறு சமூக சேவை அமைப்புகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அங்கத்தவர்கள் மற்றும் சூழல் நேயப் பணியாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

இக்கலந்துரையாடலில் தற்போது பெருகி வரும் பாதீனியத்தை முற்றாக அழிக்கும் முகமாக பொதுக் கட்டமைப்பின் தேவை கருதி 'பாதீனிய ஒழிப்பு இயக்கம்' எனும் பெயரில் செயற்றிட்ட அமைப்பு உருவாக்கப்பட்டது.

எதிர்வரும் காலங்களில் இக்கட்டமைப்பானது முதல்கொண்டு அனைத்து சமூக மட்ட அமைப்புகளுடனும் இணைந்து பாதீனிய ஒழிப்பு செயற்றிட்டத்தை மேற்கொள்ள எதிர்பார்த்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வீட்டின் கூரையில் தொங்கிய நிலையில் பெண் மருத்துவர் உடல்

## பொலிஸார் தீவிர விசாரணை

பேராதனை போதனா வைத்தியசாலையின் பெண் மருத்துவர் ஒருவரின் உடல் அவர் வசித்து வந்த வீட்டின் உத்தரத்தில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டதாக கடுகன்னாவை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பேராதனை போதனா வைத்தியசாலையின் வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவில் சேவையாற்றி வந்த 54 வயதான பெண் மருத்துவரின் உடலே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது.

கடுகன்னாவை பிரதேசத்தில் வசித்து வந்த இந்த மருத்துவரின் மர்ம மரணத்திற்கு காரணம் கொலையா அல்லது தற்கொலையா என்பது இன்னும் தெரியவரவில்லை. சம்பவம் தொடர்பாக கடுகன்னாவை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மருத்துவர் வசித்து வந்த வீட்டில் அவரது தாய், கணவர் மற்றும் உறவினரான பெண்ணொருவர் வசித்து வந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். மரணத்திற்கு பின்னரான பிரேத பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்ட பின்னர், உடல் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

# அச்சுவேலியில் வாள்வெட்டு; ஒருவர் படுகாயம்

யாழ். அச்சுவேலி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புத்தூர் சந்தியிலுள்ள வர்த்தக நிலையம் ஒன்றுக்குள் புகுந்த வாள்வெட்டுக் கும்பல் நடத்திய தாக்குதலில் வர்த்தக நிலைய உரிமையாளர் படுகாயமடைந்த நிலையில், யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு மின்வெட்டு அமுலில் இருந்த நிலையில், 2 மோட்டார் சைக்கிள்களில் வந்த கும்பல் வர்த்தக நிலையத்திற்குள் புகுந்து வாள்வெட்டு நடத்திவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளது. சம்பவத்தில் படுகாயமடைந்த 35 வயதான வர்த்தக நிலைய உரிமையாளர் அச்சுவேலி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருக்கின்றார்.

# அரச பெருந்தோட்ட யாக்க தொழிலாளர்களது பிரச்சினைகள் தொடர்பில் பேச்சுவார்த்தை





(எஸ்.கணேசன்)

அரச பெருந்தோட்டயாக்கத்தின் கீழுள்ள தோட்டங்களில் காணப்படும் பிரச்சினைகள் தொடர்பில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸிற்கும் அரச பெருந்தோட்ட யாக்கத்திற்கும் (SLSPC) இடையிலான கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

கலந்துரையாடலில் அரச பெருந்தோட்ட யாக்கத்தின் கீழுள்ள தோட்டங்களில் காணப்படும் பல்வேறு விடயங்கள் தீர்க்கமாக கலந்துரையாடப்பட்டு முடிவுகள் எட்டப்பட்டன.

அரச பெருந்தோட்ட யாக்கத்தின் தலைவர் ஸ்ரீமால் விஜயசேகர, அதன் பொது முகாமையாளர் மற்றும் நிதி முகாமையாளருடன் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவர் பாரத் அருள்சாமி தலைமையில் பன்வில பிரதேசத்தின் பணிப்பாளர் மோகனதாஸ், பன்வில பிரதேச சபை உறுப்பினர் சிவலிங்கம், மாத்தளை மாநில இயக்குனர் கமலநாதன், ரங்கலை இயக்குனர் ராஜா மற்றும் மாவட்டத் தலைவர்கள், குரூப் கமிட்டி தலைவர்கள் அமைப்பாளர்களும் கலந்துகொண்டார்கள்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த பாரத் அருள்சாமி,

இக்குழு கலந்துரையாடலில் தொழிலாளர்களுக்கு நீண்ட காலமாக செலுத்தப்படாதிருந்த ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதி மற்றும் அவர்களின் சேவைக்காலக் கொடுப்பனவை வழங்குவதற்கான வேலைத்திட்டம் இணைக்கப்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டதுடன், எமது வேண்டுகோளுக்கு இணங்க ஆரம்ப கட்டமாக 100 ஹெக்டேயர் தேயிலை மீள்நடுகை மேற்கொள்ளவும் இணக்கம் தெரிவிக்கப்பட்டு இவ்வாரம் முதல் அதனை துரித கதியில் செயற்படுத்தவும் கலாபொக்க மற்றும் கோமர தொழிற்சாலைகளை மீளத் திறக்கவும் இணக்கம் காணப்பட்டதுடன், இப்பகுதிகளில் உல்லாசப் பிரயாணிகள் அதிகமாக வரும் பகுதிகளில் எமது இளைஞர் - யுவதிகளுக்கான சுயதொழில் வேலை வாய்ப்பை அதிகரிக்கவும் அவர்களின் சந்தைப்படுத்தலுக்கு தேவையான வசதிகளை மேற்கொள்ளும் வேலைத்திட்டத்திற்கும் இணக்கம் காணப்பட்டது.

மேலும், தோட்ட முகாமைத்துவத்தினால் தான்தோன்றித்தனமாக அதிகரிக்கப்பட்டுள்ள கொழுந்து பறிக்கும் அளவை அத்தோட்டங்களில் உள்ள தோட்ட முகாமைத்துவமும் கமிட்டியும் கலந்துரையாடி தீர்மானிக்கவும் முடிவுகள் எட்டப்பட்டது.

# போதைக்கு அடிமையானவர்கள் ஆளுநர் அலுவலகத்தை அணுகலாம்

## மறுவாழ்வுக்கு உதவத்தயாரென வடக்கு ஆளுநர் தெரிவிப்பு

வட மாகாணத்தில் போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள் வட மாகாண ஆளுநர் அலுவலகத்தை அணுக முடியுமென வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

போதைப்பொருள் அடிமையானவர்களை மீட்டெடுப்பதற்காக பல்வேறு செயற்றிட்டங்களை மேற்கொண்டு வருகிறோம்.

அண்மையில் யாழ். சிறைச்சாலையில் உள்ள போதைப்பொருள் குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டவர்களை நேரடியாக சென்று அவர்களுடன் கலந்துரையாடினேன்.

போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்களை மீட்டெடுப்பதற்கு வடக்கு மாகாணத்தில் பல்வேறு வேலைத்திட்டங்கள் சமுதாய மட்டத்திலிருந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன

அண்மையில் வெளிநாடு ஒன்றிலிருந்து மனநலப் பிரச்சினையினால் பாதிக்கப்பட்டு நாடு கடத்தப்பட்ட நோயாளியின் பின்னணியைப் புரிந்துகொள்வதற்காக விசேட வைத்தியரைக் கலந்தாலோசிக்க தெல்லிப்பளை வைத்தியசாலைக்கு சென்றேன். அண்மையில் யாழ்ப்பாணத்தில் 15 வயது சிறுவன் ஒருவன் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு 7 நாட்களில் திடீரென இறந்து போனமை ஊடகங்கள் மூலம் வெளிவந்தது.

அதன் பின்னணியை புரிந்துகொள்ள குடும்பத்தை சந்தித்த நிலையில், மருத்துவப் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதேபோல் மற்றொரு 17 வயதுடையவர் போதைப்பொருள் பாவனைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

போதைக்கு அடிமையான எந்தவொரு நபரும் உடனடியாக ஆளுநர் அலுவலகத்தை அணுகலாம்.

போதைப்பொருளுக்கு அடிமையானவர்களை இனம் கண்டு மறுவாழ்வு அளிப்பதற்கு பெற்றோர்கள் அல்லது குடும்ப உறுப்பினர்களின் உதவிகள் தேவைப்படுகின்றன. வட மாகாணத்தில் போதைப்பொருள் விற்பனையாளர்கள் என சந்தேகிக்கப்படும் நபர்கள் தொடர்பில் தீவிர கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நிலையில், பாதிக்கப்பட்ட நபர்களை மனிதாபிமான ரீதியில் அணுகுவதற்கு ஆளுநர் செயலகம் தயாராக இருக்கிறது என அவர் மேலும் தெரிவித்தார்.

# வெட்டுப்புள்ளிகள் மீள்பரிசீலனை ஒரு மாத கால அவகாசம் வழங்கல்

க.பொ.த. உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் வழங்கப்பட்ட பல்கலைக்கழக வெட்டுப்புள்ளிகள் தொடர்பில், மீள்பரிசீலனை செய்ய எதிர்பார்க்கும் மாணவர்களுக்கு ஒரு மாத கால அவகாசம் வழங்கப்படவுள்ளது.

2021 க.பொ.த. உயர் தர பரீட்சை தொடர்பான பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளிகள் அண்மையில் (02) வெளியிடப்பட்டன.

வெட்டுப்புள்ளிகளின் அடிப்படையில், இவ்வருடம் 44 ஆயிரம் மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு இணைத்துக்கொள்ளப் படவுள்ளனர்.

இந்த ஆண்டு 85 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு விண்ணப்பித்துள்ளனர்.

பல்கலைக்கழகத்திற்கு அதிகளவிலான மாணவர்கள் தெரிவாகியுள்ள முதலாவது சந்தர்ப்பம் இதுவென பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்தார்.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம யாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2022, டிசம்பர் 05ஆம் திகதி, திங்கட்கிழமை

# ஆராயப்படவேண்டிய அமெரிக்காவின் கருத்து

இலங்கையில் பொருளாதார சீர்திருத்தங்களுடன் அரசியல் சீர்திருத்தங்களை முன்னெடுக்கவேண்டியது அவசியமென சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரகத்தின் (யூ.எஸ். எயிட்) நிர்வாகி சமந்தா பவர் தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் அலி சப்ரியை சந்தித்தவேளை சமந்தா பவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார். இலங்கையின் பொருளாதார நெருக்கடியை தீர்ப்பதற்கு அரசாங்கத்தின் முன்னுரிமை மற்றும் சீர்திருத்தங்கள் தொடர்பில் இதன்போது அவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

நாடு எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வது, முன்னோக்கிச் செல்வது குறித்தும் அதற்கு அமெரிக்காவின் ஒத்துழைப்பு பற்றியும் இதன்போது ஆராயப்பட்டுள்ளது.

இலங்கைக்கு செப்டெம்பர் மாதம் விஜயம் மேற்கொண்ட சமந்தா பவர் இலங்கையின் மிகவும் நலிந்த நிலையில் உள்ளவர்கள் மற்றும் ஒதுக்கப்பட்ட சமூகங்களை சேர்ந்தவர்களின் அவசரதேவைகள் உட்பட இலங்கை எதிர்கொண்டுள்ள குழப்பமான நெருக்கடிக்கு தீர்வை காண்பதற்கு உதவுவதற்கான அமெரிக்காவின் அர்ப்பணிப்பை தெரியப்படுத்தியிருந்தார்.

இந்நிலையிலேயே, அமெரிக்காவுக்கு விஜயம் செய்துள்ள வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் சப்ரியிடம் அரசியல் சீர்திருத்தத்தின் அவசியம் குறித்து வலியுறுத்தியுள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் நிலையில், ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்டுள்ள நிதி கிடைக்கப்பெறுவதற்கு அமெரிக்கா முக்கிய பங்கு வகிக்கிறது. இவ்வாறானதொரு சூழ்நிலையிலேயே அரசியல் சீர்திருத்தம் குறித்து பேசப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்துடன் அதிகாரிகள் மட்ட பேச்சுவார்த்தைகள் நிறைவடைந்து 2.9 பில்லியன் அமெரிக்க டொலர்களை இலங்கைக்கு வழங்குவதற்கு இணக்கம் வெளியிடப்பட்டுள்ளது. எனினும், கலந்துரையாடல்களின் இறுதிக்கட்டம் இன்னும் எட்டப்படவில்லை.

ஐ.எம்.எவ். உடன்படிக்கைகள் கசப்பானவையாக இருந்தாலும் நாட்டின் நன்மை கருதி அவற்றை அமுல்படுத்த வேண்டுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஏற்கனவே கருத்து வெளியிட்டிருந்தார்.

இதன் பின்னணியில் அமெரிக்காவின் சக்திவாய்ந்த அமைப்பான யூ.எஸ். எயிட்டின் நிர்வாகி சமந்தா பவரின் கருத்துகளை வெறுமனே சாதாரணமாக எடுத்துக்கொள்ள முடியாது.

இலங்கையில் இறுதிக்கட்ட யுத்தத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் ஆகியன தொடர்பில் பொறுப்புக் கூறல் அரசாங்கத்திடம் இல்லையென சர்வதேச நாடுகள் குற்றஞ்சுமத்தி வருகின்றன. நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த எந்தவித முயற்சிகளும் மேற்கொள்ளப்படவில்லையெனவும் மேற்குலக நாடுகள் தெரிவித்து வருகின்றன.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில் பிரித்தானியா தலைமையிலான இணை அனுசரணை நாடுகள் இந்த விடயத்தை மிகக் கடுமையாக தெரிவித்திருந்தன. மேலும், இலங்கையில் நெருக்கடி நிலைமை ஏற்படுவதற்கு பொருளாதாரக் குற்றங்கள் காரணமெனவும் அந்நாடுகள் சுட்டிக்காட்டியிருந்தன.

இலங்கையில் நல்லிணக்கத்துக்கும் பொறுப்புக் கூறலுக்கும் உள்ளக பொறிமுறையே தீர்வாக அமையும் என்றும் அந்த விடயத்தில் விட்டுக்கொடுப்புக்கு இடமில்லையென்றும் அலி சப்ரி ஐக்கிய நாடுகள் சபையில் அறிவித்திருந்தார்.

மறுபுறம், இலங்கை மக்களின் ஜனநாயக உரிமைகளை வலுப்படுத்தும் வகையில் பிற்போடப்பட்டுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை உடனடியாக நடத்துமாறு அரசியல் கட்சிகளும் சமூக, சிவில் அமைப்புகளும் கோரிக்கை விடுத்து வருகின்றன.

நாடு பெரும் பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கியுள்ள நிலையில், தேர்தலை இப்போதைக்கு நடத்தும் எண்ணம் கிடையாதென ரணில் விக்கிரமசிங்க ஆணித்தரமாக நாடாளுமன்றத்தில் அறிவித்துள்ளார்.

எல்லை நிர்ணயக்குழு நியமிக்கப்பட்டமையானது, தேர்தலை காலந்தாழ்த்துவதற்காகத் தான் என்ற குற்றச்சாட்டு பரவலாக முன்வைக்கப்படுகிறது.

நாடாளுமன்றத்தின் ஊடாக நியமனம்பெற்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேர்தலின் ஊடாக ஜனநாயகத்தை நிலைநிறுத்த வேண்டுமென பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் தேசிய மக்கள் சக்தி ஆகியன வலியுறுத்தி வருகின்றன. ஆயினும், அந்தக் கோரிக்கையை அரசாங்கம் செவிமடுப்பதாக இல்லை.

தேர்தல் ஒன்றை நடத்த முடியாவிடின் தேர்தல் ஆணைக்குழுவொன்று எதற்கு என்ற கேள்வியை அதன் தலைவர், சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா கடந்த வாரம் வெறுப்புடன் கருத்து வெளியிட்டிருந்தார்.

உள்நாட்டில் இவ்வாறு மாறுபட்ட கருத்தாடல்கள் இடம்பெற்றுவரும் சூழ்நிலையில், அரசியல் சீர்திருத்தம் என்ற விடயத்தை அமெரிக்கா முன்வைத்துள்ளது. ஆசிய பிராந்தியத்தில் அமெரிக்கா, இந்தியா ஆகிய நாடுகளின் வகிபாகம் மிக முக்கியமானது.

இந்நாடுகளுடன் கூட்டணியில் இருக்கும் பிரித்தானியாவும் அண்மையில் ஒரு விடயத்தை சுட்டிக்காட்டியிருந்தது. இந்தியாவின் ஆதரவுடன் இலங்கைக்கு தொடர்ந்தும் உதவிகளை வழங்க எதிர்பார்ப்பதாக பிரித்தானியா சுட்டிக்காட்டியிருந்தது.

அவ்வாறாயின் இலங்கை தொடர்பில் மேற்குறிப்பிட்ட நாடுகள் ஒருமனதாக இருக்கின்றமை புலனாகின்றது.

இலங்கையில் மாகாண சபைகளுக்கு அதிகாரம் வழங்கும் வகையில் 13ஆவது திருத்தச்சட்டம் அமுல்படுத்தப்பட வேண்டுமென இந்தியா வலியுறுத்திவரும் நிலையில் அமெரிக்காவின் கருத்து மிக முக்கியமாக கருதப்பட வேண்டும்.

## இன்றைய நாளில்...

- 1837 – இலங்கையில் முதலாவது சீனித் தொழிற்சாலை தூம்பறை என்ற இடத்தில் ஆரம்பிக்கப்பட்டது.
- 1896 – சென்னை கன்னிமாரா பொது நூலகம் பொதுமக்களுக்காகத் திறந்துவிடப்பட்டது.
- 1995 – ஈழப் போர்: இலங்கை அரசு யாழ்ப்பாணத்தை விடுதலைப் புலிகளிடமிருந்து தாம் முழுமையாகக் கைப்பற்றியதாக அறிவித்தது.
- 2003 – இந்திய விண்வெளி ஆராய்ச்சிக் கழகம் குளிர் திரவ ஏவுகணையை வெற்றிகரமாக சோதித்திருப்பதாக அறிவித்தது.

# ஐ.நா.வின் மத்திய கிழக்கு பிரிவினைத் தீர்மானத்துக்கு பிறகு கடந்துவிட்ட 75 வருடங்கள்

**சத்யா**

மத்திய கிழக்கில் யூத அரசொன்றையும் பாலஸ்தீன அரசொன்றையும் உருவாக்குவதற்காக - பிரிவினை தீர்மானம் ( partition Resolution ) என்று அறியப்பட்ட - வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்மானம் ஐக்கிய நாடுகள் பொதுச்சபையில் நிறைவேற்றப்பட்டு கடந்த நவம்பர் 29ஆம் திகதியுடன் 75 வருடங்கள் கடந்துவிட்டன.

1947 நவம்பர் 29இல் நிறைவேற்றப்பட்ட அந்த தீர்மானத்தின் பிரகாரம் பாலஸ்தீன மண்ணிலிருந்து இஸ்ரேல் யூத அரசு உருவாக்கப்பட்டதுடன், ஜெருசலேம் நகருக்கு விசேட சட்ட மற்றும் அரசியல் அந்தஸ்து வழங்கப்பட்டது. அதன் பிரகாரம் ஜெருசலேம் சுதந்திரமான ஒரு நகர அரசாகவோ அல்லது சுயாதிபத்தியம் கொண்ட ஒரு பகுதியாகவோ இல்லாமல் அதை விடவும் குறைவான ஒன்றாகவே கருதப்பட்டது.




75 வருடங்கள் கடந்துவிட்ட பின்னரும் கூட துரதிர்ஷ்டவசமாக பாலஸ்தீன அரசு உருவாக்கப்படவில்லை. பிரிவினைத் தீர்மானத்தின்படி பாலஸ்தீனத்தின் 55 சதவீத நிலப்பரப்பையே யூத அரசு உள்ளடக்கியிருக்கவேண்டும். ஆனால், பல போர்களின் விளைவாக இன்று வரலாற்று ரீதியான பாலஸ்தீனத்தின் 85 சதவீத நிலப்பரப்பை இஸ்ரேல் அரசு கட்டுப்படுத்துகிறது. இந்த போர்களின்போதும் பின்னர் மேற்கொள்ளப்பட்ட ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளின் மூலமாகவும் பாலஸ்தீனர்களை அவர்களது மண்ணில் இருந்து இஸ்ரேல் விரட்டியடித்திருக்கிறது.

நவம்பர் 29 ஐக்கிய நாடுகள் சபையினால் பாலஸ்தீன மக்களுடனான ஒருமைப்பாட்டு தினமாக அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. ஏழரை தசாப்த காலமாக சொந்த மண்ணில் சுதந்திரமான மக்களாக வாழ்வதற்காக பாலஸ்தீனர்கள் நடத்திவருகின்ற தியாகம் மிகுந்த போராட்டத்துக்கு உலகம் பூராவும் மக்கள் ஒருமைப்பாட்டை வெளிப்படுத்தி வருகின்றபோதிலும், சர்வதேச சமூகத்தினால் சுதந்திர பாலஸ்தீனம் ஒன்றை உருவாக்க முடியவில்லை.

பலஸ்தீன சனத்தொகை இப்போது 80 இலட்சத்துக்கும் அதிகம் என்று மதிப்பிடப்படுகிறது. இவர்கள் பிரதானமாக கிழக்கு ஜெருசலேம் உட்பட 1967ஆம் ஆண்டில் இருந்து இஸ்ரேல் ஆக்கிரமித்திருக்கும் பாலஸ்தீன பிராந்தியங்களிலும் இஸ்ரேலிலும் அயல் அரபு நாடுகளிலும் வாழ்ந்துவருகிறார்கள். மனிதாபிமான விவகாரங்கள் ஒருங்கிணைப்புக்கான ஐக்கிய நாடுகள் அலுவலகம் வெளியிட்ட தகவல் அறிக்கைகளின் பிரகாரம் 21 இலட்சம் பலஸ்தீனர்களுக்கு அவசர மனிதாபிமான உதவி தேவைப்படுகிறது.

கடந்த 14 வருடங்களுக்கும் அதிகமான காலமாக 20 இலட்சத்துக்கும் அதிகமான பாலஸ்தீனர்கள் இஸ்ரேலின் சட்டவிரோத முற்றுகையின் கீழ் காசா பள்ளத்தாக்கில் வாழ்ந்து வருகிறார்கள் என்றும் இந்த முற்றுகை பாலஸ்தீனர்களை கூட்டாக தண்டிக்கும் ஒரு நடவடிக்கையின் வடிவில் அமைந்திருக்கிறது என்றும் சர்வதேச மன்னிப்புச்சபை கூறுகிறது.

காசாவில் வாழ்பவர்களில் பெரும்பாலானவர்கள் அகதிகள் அல்லது 1948 சொந்த மண்ணைவிட்டு தப்பியோடியவர்களின் வம்சாவளியினர் ஆவர். இவர்களை படுமோசமான நிலைமைகளின் கீழ் வாழ இஸ்ரேல் நிர்ப்பந்திக்கிறது.

கிழக்கு ஜெருசலேம் உட்பட மேற்கு ஆற்றங்கரையையும் காசா பள்ளத்தாக்கையும் 1967 போரில் ஆக்கிரமித்த பிறகு உடனடியாக இஸ்ரேல், பாலஸ்தீனர்கள் புதிதாக எந்தவொரு நீர் சேமிப்பு கட்டமைப்புகளையும் அதன் இராணுவத்தின் அனுமதியின்றி அமைக்கமுடியாது என்று உத்தரவிட்டது. இராணுவத்தின் அனுமதியைப் பெறுவதென்பது உண்மையில் இயலாத காரியமாகும்.

அந்த சட்டத்தின் கீழ் பாலஸ்தீனர்கள் கிணறுகளை கிண்டவோ, ஏற்கெனவே இருக்கும் கிணறுகளை ஆழப்படுத்தவோ அல்லது நீர்ப்பம்பிகளை நிறுவவோ முடியாது.ஜோர்தான் ஆற்றையோ அல்லது நீரூற்றுக்களையோ பாலஸ்தீனர்கள் பயன்படுத்தமுடியாது. மேற்கு ஆற்றங்கரையில் மழைநீரை சேகரிக்கவும் கூட இஸ்ரேல் கட்டுப்பாடுகளை விதிக்கிறது. பாலஸ்தீனர்களுக்கு சொந்தமான பல மழைநீர் சேகரிப்பு தொட்டிகளை இஸ்ரேலிய இராணுவம் நிர்மூலம் செய்கிறது.

பாலஸ்தீனர்கள் இருவர் தினமொன்றுக்கு சராசரி 73 லீற்றர் நீரை பெறுவதற்கே இஸ்ரேல் அனுமதிக்கிறது. இது உலக சுகாதார நிறுவனம் விதந்துரைத்த தினமொன்றுக்கு குறைந்தபட்சம் 100 லீற்றர் நீர் என்ற அளவையும் விட குறைவானதாகும்.

மின்சாரம், மருந்துவகைகள், உணவு, கல்வி உபகரணங்கள் மற்றும் கட்டடப்பொருட்களுக்கும் தட்டுப்பாடு நிலவுகிறது.உலகில் மிகவும் உயர்ந்த வேலையில்லாதோர் சதவீதத்தைக் கொண்டதாக காசா பள்ளத்தாக்கு விளங்குவதாகவும் மக்கள்தொகையில் அரைவாசிக்கும் அதிகமானோர் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்வதாகவும் சர்வதேச மன்னிப்புச்சபை 2022 ஆம் ஆண்டில் அறிக்கையொன்றில் கூறியிருந்தது.

பாலஸ்தீன மக்களுக்கு எதிரான குற்றச்செயல்களை தொடரும் இஸ்ரேலை கண்டனம் செய்து ஐக்கிய நாடுகள் பொதுச்சபை இதுவரையில் எண்ணற்ற தீர்மானங்களை நிறைவேற்றியிருக்கிறது. பாலஸ்தீனம் மீதான இஸ்ரேலின் ஆக்கிரமிப்பு சட்டவிரோதமானது என்றும் அது மண்ணின் சொந்த மக்களை வெளியேற்றி வேறு ஆட்களை குடியேற்றும் ஒரு நடவடிக்கைக்கு ஒப்பானது என்றும் கடந்த ஒக்டோபரில் பாலஸ்தீன பிராந்தியத்தில் மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பான ஐக்கிய நாடுகள் விசேட அறிக்கையாளர் கண்டனம் செய்திருந்தார்.

இத்தகைய சூழ்நிலையில், ஐக்கிய நாடுகள் சபை நவம்பர் 29ஆம் திகதியை பாலஸ்தீனர்களுடனான ஒருமைப்பாட்டு தினமாக நிர்ணயித்து பாலஸ்தீனர்களின் அவலங்கள் மீதும் அவர்களின் பிரச்சினை இன்னமும் தீர்க்கப்படவில்லை என்ற கவலைக்குரிய யதார்த்தநிலை மீதும் சர்வதேச சமூகம் கவனத்தைத் திருப்ப ஒரு வாய்ப்பை வழங்குகிறது.

வெளியார் தலையீடின்றி சுயநிர்ணய உரிமைக்கும் தேசிய சுதந்திரம் மற்றும் இறைமைக்கான உரிமைக்கும் தாயகத்துக்கு திரும்பிவந்து வீடுகளையும் சொத்துகளையும் கொண்டிருக்கும் உரிமைக்கும் பாலஸ்தீனர்கள் உரித்துடையவர்கள் என்று ஐக்கிய நாடுகள் பொதுச்சபை வரையறை செய்திருக்கிறது. இவை அவர்களிடமிருந்து பறிக்கமுடியாத உரிமைகளாகும்.

பாலஸ்தீனர்கள் மீதான ஒடுக்குமுறையை முடிவுக்கு கொண்டுவருமாறு உலக நாடுகள் இடையறாது விடுக்கின்ற வேண்டுகோளை இஸ்ரேல் தொடர்ச்சியாக அலட்சியம் செய்கிறது. ஐக்கிய நாடுகளும் உலக நாடுகளும் கூட்டாக இஸ்ரேலை தண்டிக்கும் வகையிலான உறுதியான நடவடிக்கைகளை எடுக்காவிட்டால் அதன் ஆக்கிமிப்பும் ஒடுக்குமுறையும் தொடரவே செய்யும்.

உலக நாடுகளின் மனித உரிமை மீறல்கள் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்ட மீறல்கள் குறித்து கண்டனம் செய்கின்ற அமெரிக்காவும் மேற்கு நாடுகளும் இஸ்ரேலின் கொடுமைகளை மட்டும் கண்டுகொள்வதில்லை.

# நுவரெலியா மாவட்டத்திற்கு அறிவிக்கப்பட்ட பிரதேச செயலகங்கள் காணாமல் போயுள்ளன

## அடுத்த வருடமாவது கண்டுபிடித்துத் தருவீர்களா? த.மு.கூ. எம்.பி. உதயகுமார் நாடாளுமன்றில் கேள்வி

நுவரெலியா மாவட்டத்திற்கு வழங்குவதாக அறிவிக்கப்பட்ட பிரதேச செயலகங்கள் காணாமல் போயுள்ளன - அடுத்த வருடமாவது கண்டுபிடித்து தருவீர்களா?

பொது நிர்வாக, உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு நாட்டின் நிர்வாக விடயத்தில் முக்கிய பங்கு வகிக்கிறது. இந்த அமைச்சுக்கு மொத்த வரவு-செலவுத்திட்ட ஒதுக்கீட்டில் 23% நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அது 856 பில்லியன் ரூபாவாகும்.

மற்றையது, விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு. இந்த அமைச்சுக்கு வரவு-செலவுத் திட்டத்தில் மிகக் குறைந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 0.3% அதாவது வெறும் 10 பில்லியன் ரூபாவாகும்.

உள்நாட்டு அலுவல்கள் அமைச்சுக்கு அதிகளவான நிதி ஒதுக்கப்பட்டுள்ளதால் இந்த வருடத்திலாவது நுவரெலியா மாவட்ட மக்களின் அதிமுக்கிய தேவையாக இருக்கும் பிரதேச செயலகங்கள் அதிகரிப்பு விடயம் நிறைவேற்றப்படும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

நுவரெலியா மாவட்டத்தில் தற்போது காணப்படும் பிரதேச செயலகங்களை அதிகரிக்கும் வகையில் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டிருப்பதை விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் அதாவது பிரதமர் அறிந்திருப்பார் என நினைக்கிறேன்.



நுவரெலியா மாவட்டத்தில் தற்போது 5 ஆக உள்ள பிரதேச செயலகங்களின் எண்ணிக்கை 10 ஆக அதிகரிக்கப்படும் என்று தெரிவித்து அப்போதைய அமைச்சர் வஜிர அபேவர்த்தன 2018ஆம் ஆண்டு அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பித்து 2019 இல் வர்த்தமானி அறிவித்தலும் வெளியிட்டார்.

அந்த வர்த்தமானி அறிவித்தலில் நுவரெலியா மாவட்டத்தில் புதிதாக 5 பிரதேச செயலகங்களும், காலி மாவட்டத்தில் 3 பிரதேச செயலகங்களும் உருவாக்கப்படும் என தெரிவிக்கப்பட்டிருந்தது.

அந்த வர்த்தமானி அறிவித்தல்படி - காலி மாவட்டத்தில் நிறுவப்படும் என அறிவிக்கப்பட்ட மூன்று புதிய பிரதேச செயலகங்கள் அவ்வாறே உருவாக்கப்பட்டு தற்சமயம் இயங்குகின்றது. அதனை நாம் எதிர்க்கவில்லை.

ஆனால், நுவரெலியா மாவட்டத்துக்கு வழங்குவதாக அறிவிக்கப்பட்ட புதிய 5 பிரதேச செயலகங்கள் காணாமல் போயுள்ளன, இவற்றை நுவரெலியா மாவட்ட மக்கள் தேடிக்கொண்டு இருக்கிறார்கள்.

வர்த்தமானி வெளிவந்து நான்கு வருடங்கள் முடிவடையவுள்ள நிலையில், இன்னும் பிரதேச செயலகங்கள் உருவாக்கப்படவில்லை என்பதை பிரதமர் மற்றும் அப்போதைய அமைச்சர் வஜிர அபேவர்த்தன ஆகியோரிடம் மிகுந்த ஏமாற்றத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆகவே, அடுத்த வருடமாவது இந்த பிரதேச செயலகங்களை கண்டுபிடித்து தருவீர்களா என்று கேட்க விரும்புகிறேன்.

நுவரெலியா மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் 5 பிரதேச செயலகங்களும் 491 கிராம சேவகர் பிரிவுகளும் கொண்டு சுமார் 8 இலட்சம் மக்கள்தொகை காணப்படுகிறது.

| பிரதேச செயலகங்கள் | கிராமசேவகர் பிரிவு | சனத்தொகை |
|---|---|---|
| கொத்மலை | 96 | 121,907 |
| ஹங்குராகெத்த | 131 | 107,119 |
| வலப்பனை | 125 | 128,920 |
| நுவரெலியா | 72 | 227,462 |
| அம்பகமுவ | 67 | 254,725 |

இந்த சனத்தொகை விபரத்தை மொனராகலை மாவட்டத்துடன் ஒப்பிடுகையில் அங்கு 6 இலட்சம் பேர் கொண்ட சனத்தொகை உள்ளதுடன், 11 பிரதேச செயலகங்கள் உள்ளன.

ஆகக் கூடுதலாக - வெல்லவாய பிரதேச செயலகத்தில் 68 ஆயிரம் மக்கள் வாழ்கின்றனர்.

ஆகக் குறைவாக - கதிர்காமம் பிரதேச செயலகத்தில் 25 ஆயிரம் மக்கள் வாழ்கின்றனர்.

ஆனால், மொனராகலை மாவட்டத்தைவிட அதிக மக்கள்தொகை கொண்ட நுவரெலியா மாவட்டத்தில் வெறும் 5 பிரதேச செயலகங்கள் மாத்திரமே உள்ளன.

அதில் அம்பகமுவ பிரதேச செயலகத்தின் கீழ் 2 இலட்சத்து 50 ஆயிரம் பேர் வாழ்கின்றனர். நுவரெலியா பிரதேச செயலகத்தின் கீழ் 2 இலட்சத்து 25 ஆயிரம் பேர் வாழ்கின்றனர். இது மிகவும் அநீதியான விடயமாகும்.

அதுமாத்திரமன்றி, பெரும்பான்மை மக்கள் அதிகம் வாழும் ஹங்குராங்கெத்த பிரதேச செயலகத்தின் கீழ் ஒரு இலட்சம் பேர் வாழ்கின்றனர். இது பெரும்பான்மை மக்களுக்கும் அநீதி இழைக்கப்பட்டுள்ளது.

இதன்படி முதல் கட்டமாக – ஏற்கனவே, வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள பிரதேச செயலகங்களை உடனடியாக செயற்படுத்துமாறு கேட்டுக் கொள்கிறேன்.


அத்துடன், நோர்வூட் பிரதேச செயலகம் மற்றும் தலவாக்கலை பிரதேச செயலகம் என்பன மேலும் பிரிக்கப்பட வேண்டும்.

(10 ஆம் பக்கத் தொடர்ச்சி)

## நக்கல் நமசிவாயம்

முன்னர் பாணும் பருப்பும் சாப்பிட்டாவது இருப்பம் என்று சொல்லுவம்..! இப்ப பாணையும் பருப்பையும் நினைச்சு பார்க்கக் கூட முடியேல்ல..!





கொழும்பு புதுக்கடை நல்மரணமாதா ஆலயத்தின் 175ஆவது வருட பூர்த்தி விழாவும் விசேட பூஜைகளும் கொழும்பு பேராயர் மல்கம் கர்தினால் ரஞ்சித் தலைமையில் நேற்று நடைபெற்றது. கொழும்பு மாநகர சபை உறுப்பினர் ஜோசப் பெர்னாண்டோ மற்றும் கொழும்பு மாநகர சபை உறுப்பினர்கள் இதில் கலந்துகொண்டனர்.

(படங்கள்: மொஹமட் நசார்)

# 1000 பேருடன் கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்த அமெரிக்க பயணக்கப்பல்



அமெரிக்காவின் சொகுசுக் கப்பலான 'அசாமரா க்வேஸ்ட்' 600 சுற்றுலாப்பயணிகள் மற்றும் 400 பணியாளர்களுடன் நேற்று முன்தினம் (03) சனிக்கிழமை இரவு கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்தது.

அன்றைய தினம் கொழும்பில் நங்கூரமிடப்பட்டிருந்த இக்கப்பல் இன்று (05) திங்கட்கிழமை அம்பாந்தோட்டை துறைமுகத்தை சென்றடைவுள்ளது. கடந்த ஒரு மாத காலத்திற்குள் இலங்கைக்கு வருகை தந்துள்ள மூன்றாவது சொகுசு சுற்றுலா பயணக்கப்பல் இதுவாகும்.

கடந்த நவம்பர் 29ஆம் திகதி உலகின் அதிசொகுசுக் கப்பலான 'மெய்ன் சிஃப்-5' என்ற கப்பல் 2014 சுற்றுலாப்பயணிகள் மற்றும் 922 பணியாளர்களுடன் கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்தது.

இதேவேளை நவம்பர் 18ஆம் திகதி அமெரிக்காவின் 'வைக்கிங் மார்ஸ்' என்ற சொகுசு பயணிகள் கப்பல் 900 பயணிகளுடன் கொழும்புத் துறைமுகத்திற்கு வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தேசிய கொள்கைகள் ஆணைக்குழுவை அமைக்க ஜனாதிபதி செயலாளர் தலைமையில் உபகுழு



ஒழுங்குமுறைப்படுத்தலுடன் தேசிய கொள்கைகளை உரிய முறையில் நடைமுறைப் படுத்துவதற்கு தேசிய கொள்கைகள் ஆணைக் குழுவை அமைப்பதற்குத் தேவையான அடிப் படைக் கட்டமைப்பைத் தயாரிப்பதற்காக ஜனாதிபதி செயலாளர் சமன் ஏகநாயக தலைமை யில் உப குழுவொன்றை அமைப்பதற்கு அண்மையில் (01) நடைபெற்ற குறுகிய, நடுத்தர மற்றும் நீண்டகால கொள்கைத் தயாரிப்புக்கான முன்னுரிமைகளை அடையாளம் காண்பதற்கான தேசிய பேரவையின் உப குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இந்த உபகுழுவின் ஏனைய உறுப்பினர்களாகப் பிரதமரின் செயலாளர் அநுர திசாநாயக, பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் பிரியந்த மாயாதுன்ன ஆகியோரும் நிதி அமைச்சு, சுகாதார அமைச்சு, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, சட்டமா அதிபர் திணைக்களம், சட்ட வரைஞர்கள் திணக்களம் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் பிரதிநிதிகளை நியமிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தலைமையில் அண்மையில் (01) கூடிய இக்குழுவில் ஜனாதிபதி செயலாளர் சமன் ஏகநாயக, பிரதமரின் செயலாளர் அநுர திசாநாயக்க மற்றும் பொதுநிர்வாக அமைச்சின் செயலாளர் பிரியந்த மாயதுன்ன உள்ளிட்ட அதிகாரிகள் கலந்துகொண்டிருந்தனர்.

கொள்கைகளைத் தயாரித்தல், நடைமுறைப் படுத்தல் மற்றும் கண்காணிப்பதற்கு சுயாதீன நிறுவனமாக சட்டத்தின் ஊடாக இந்த ஆணைக்குழுவை அமைக்க எதிர்பார்த்திருப்பதாகவும், இது தொடர்பான அடிப்படைக் கட்டமைப்பை ஜனவரி மாத நடுப்பகுதியில் தயாரித்து முடிப்பதற்கு எதிர்பார்த்திருப்பதாகவும் உப குழுவின் தலைவர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொள்கைகளை நடைமுறைப்படுத்துவது மற்றும் ஒழுங்குமுறைப்படுத்துவது, கண்காணிப் பதற்கான முழுமையான சட்ட ரீதியான அதிகாரம் இந்த ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட வேண்டும் என இங்கு கருத்துத் தெரிவித்த அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

இது போன்ற சுயாதீன ஆணைக்குழுக்களை அமைத்து வெற்றிபெற்ற ஏனைய நாடுகளின் கட்டமைப்புகளை ஆராய்ந்து இது தொடர்பான திட்டங்களைத் தயாரிப்பதன் அவசியம் குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

இக்கூட்டத்தில் இராஜாங்க அமைச்சர்களான ஷெஹான் சேமசிங்க, ஜனாக வக்கும்புர, அஷோக பிரியந்த, நாடாளுமன்ற உறுப்பினர்களான ரவூப் ஹக்கீம், ஏ.எல்.எம்.அதாவுல்லா ஆகியோரும் கலந்துகொண்டனர்.



இந்து சமய அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான தேசிய ஆக்கத்திறன் விருது (2022/2019) இந்து சமய அறநெறிப் பாடசாலைகள், ஆசிரியர்களுக்கான தேசிய மேன்மை விருது (2022/2019) என்பன வழங்கும் விழா நேற்று முன்தினம் (3)சனிக்கிழமை கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் இடம்பெற்றது. இதன்போது உடப்பு இந்து அறநெறிக் கழகம், ஸ்ரீகோகுலம் மற்றும் ஆண்டாள் அறநெறிப் பாடசாலைகளுக்கும் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது. அறநெறிப் பாடசாலைப் பொறுப்பாசிரியர் பா.முருகானந்தன் ஆசிரியர் மேன்மை விருதையும் அறநெறிப் பாடசாலைகளுக்கான விருதையும் ஓய்வுபெற்ற மேலதிக கல்விச்செயலாளர் எஸ்.தில்லை நடராசா மற்றும் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் ய.அநிருத்தனன் ஆகியோரிடமிருந்து பெற்றுக்கொண்டார்.

# பள்ளிவாசல்களில் ஜும்ஆத் தொழுகை நடத்துதல்

## முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் ஊடக அறிக்கை

(அஷ்ரப் ஏ.சமத்)

இலங்கை வக்ப் சபை, முஸ்லிம் சமய பண்பாட் டலுவல்கள் திணைக்களம், அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா (ACJU), தரீக்காக்களின் உச்சபீடம் (SCOT), தேசிய ஷூரா கவுன்சில் மற்றும் ஷரியா கவுன்சில் ஆகியவற்றின் இணக்கத் துடன் உடனடியாக நடைமுறைக்கு வரும் வகை யில் கொவிட் தொற்றுநோய்க்கு முந்தைய காலப்பகுதியில் ஜும்ஆத் தொழுகை இடம்பெற்ற ஜும்ஆப் பள்ளிவாசல்களில் மாத்திரம் ஜும்ஆவை நடத்த முடிவு செய்துள்ளது.

இது தொடர்பில் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல் கள் திணைக்களம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது,

கொரோனா தொற்றுக் கட்டுப்பாடுகள் காரணமாக, பொதுமக்கள் ஒன்றுகூடுவது தொடர்பாக, சுகாதார அமைச்சு அதிகாரிகளால் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்ததன் காரணமாக அனைத்து பள்ளிவாசல்கள், தக்கியாக்கள், ஷாவியாக்களில் ஜும்ஆத் தொழுகையை நடத்துவதற்கு எமது MRCA/A/06/Covid/19ஆம் இலக்க மற்றும் 17.06.2021 ஆம் திகதிய சுற்றுநிருபத்தின் மூலம் அனுமதி வழங்கப்பட்டிருந்தமை தாங்கள் அறிந்ததே.

தற்போது கொரோனா கட்டுப்பாடுகள் முழுமையாக தளர்த்தப்பட்டுள்ளதால், கொரோனா தொற்றுக்கு முந்தைய நடைமுறையின் பிரகாரம், ஜும்ஆப் பள்ளிவாசல்களில் மாத்திரம் ஜும்ஆத் தொழுகை நடத்த வேண்டும் எனப்பல சமய அமைப்புகள் மற்றும் சில பள்ளிவாசல்களின் நம்பிக்கையாளர்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர். எனவே, கொரோனா கட்டுப்பாடுகள் அமுல்படுத்துவதற்கு முன்பு ஜும்ஆத் தொழுகை இடம்பெற்ற பள்ளிவாசல்களில் மாத்திரம் ஜும்ஆத் தொழுகையை நடத்துமாறு அனைத்து பள்ளிவாசல்கள், தக்கியாக்கள் ,ஷாவியாக்களின் நம்பிக்கையாளர்களும் பொறுப்பாளர்களும் அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

எந்தவொரு பள்ளிவாசல் நிர்வாகமும் தமது பள்ளிவாசல்கள், தக்கியாக்கள், ஷாவியாக்களை ஜும்ஆப் பள்ளிவாசலாக தரமுயர்த்த விரும் பினால், இத்திணைக்களத்தினால் தயாரிக்கப் பட்டுள்ள விதிமுறைகளுக்கேற்ப அவர்கள் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்தல் வேண்டும்.

எவ்வாறாயினும், பள்ளிவாசல்கள், தக்கியாக் கள், ஷாவியாக்களை ஜும்ஆப் பள்ளிவாசலாக தரமுயர்த்துவது கவனமாக மதிப்பிடப்பட்டு, அவர்களின் கோரிக்கைக்கு நியாயமான காரணங்கள் இருந்தால் மாத்திரம் முறையான ஆய்வுக்குப் பின்னரே இத்திணைக்களத்தினால் முடிவெடுக்கப்படும் என அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# பொலிஸ் அதிகாரியின் வீட்டுக்குள் நுழைந்து துப்பாக்கிதாரிகள் கொள்ளை

வெலிப்பன்ன குருந்த வீதியில் அமைந்துள்ள பொலிஸ் அதிகாரியொருவரின் வீட்டிற்கு மோட்டார் சைக்கிளில் வந்த ஆயுதம் தாங்கிய குழுவினர் கடந்த சனிக்கிழமை பிற்பகல் அத்துமீறி நுழைந்து வீட்டிலிருந்த 2 கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் தங்க ஆபரணங்களை திருடிச் சென்றுள்ளதாக வெலிப்பன்ன பொலிஸார் தெரிவித்தனர்.

ஆயுதம் ஏந்திய நபர்கள் உள்ளே புகுந்தபோது பொலிஸ் பரிசோதகர் வீட்டில் இல்லை எனவும் ஆயுததாரி கள் நடத்திய தாக்குதலில் பொலிஸ் பரிசோத கரின் மனைவி காயமடைந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

ஆயுதம் ஏந்திய நபர்கள் T-56 ரக துப்பாக்கியைக் கொண்டு வந்து தங்கநகை மற்றும் மோதிரம் உட்பட 2 கைபேசிகளையும் திருடிக்கொண்டு தப்பிச் சென்றுள்ளதாக இதுவரை மேற்கொள்ளப்பட்ட விசாரணை களில் தெரிய வந்துள்ளது.


## செலான் வங்கி பீஎல்.சி.

1990 ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9ஆம்.பிரிவின் கீழ் நடைபெறும் ஏலவிற்பனை

**செலான் வங்கி (பீ.எல்.சி.) - நிட்டம்புவ கிளை**

**பெறுமதிமிக்க இடம் ஒன்றின் பிரசித்த ஏலவிற்பனை**

பஸ்யால வர்த்தகப் பதிவு இலக்கம் WM /වසා /6675 என்ற இலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஒரு ஸ்தாபனமாக கீர்த்திநாமம் பெற்ற "பமோடி மோட்டர்ஸ்" என்ற ஸ்தாபனத்தை தனியுடமை வியாபாரமாக.நடத்திக்கொண்டு இருக்கும் பஸ்யாலயில் வசிக்கும் பிரம்மனகே விஜித சாந்த என்பவர் கடப்பாடுடையவராகவும் / ஈடுவைத்தவராகவும் என்ற வகையில் கொடுப்பனவில் தவணை தவறியுள்ளதால் வங்கியின் சார்பாக பிரசித்த நொத்தாரிசு W.A.R.J.வெல்லப்பிளி என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2017.12.28 ஆம் திகதியிடப்பட்ட 1433ஆம் இலக்க ஈட்டுமுறி மீது செலான் வங்கி பீ.எல்.சியில் அடகுவைக்கப்பட்ட வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளதால், இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணி மற்றும் அதன் சுற்றுச்சூழலானது,

**2022ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 23ஆம் திகதி மு.ப. 11 மணிக்கு செலான் வங்கி பீ.எல்.சி. மூலம் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்திற்குட்பட்டு செலான் வங்கி பீ.எல்.சி. இல. 90, காலி வீதி, கொழும்பு - 03இல் உள்ள வங்கியின் வளாகத்தில் என் மூலமாக பகிரங்க ஏல விற்பனையில் விற்கப்படும்**

இந்த ஏல விற்பனையானது சுகாதார அமைச்சின் கொவிட்-19 நெறிமுறைகளை பின்பற்றுவதற்கான கூட்டிப்பான வழிகாட்டலுக்கு ஏற்ப நடத்தப்படும்

**அட்டவணை**

மேல் மாகாணம், அத்தனகல்ல காணி பதிவு பிரிவிற்குள், கம்பஹா மாவட்டத்தில் ஹாபிடிகம் கோரளே யடிகம பத்துவே மீரிகம பிரதேச சபை எல்லைக்குள் மற்றும் பிரதேச செயலகம் எல்லைக்குள் மக்கானிகொட வடக்கு கிராமசேவகர் பிரிவில் மக்கானிகொட கிராமத்தில் உள்ள உரிமம் பெற்ற நில அளவையாளர் ஐ.எம்.ரஞ்சித் இளங்கோன் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2017.05.18ஆம் திகதியிடப்பட்ட 3414ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள பொல்ஹேன எஸ்டேட் என்று அழைக்கப்படும் காணி லொட் 1 என அடையாளமிடப்பட்டு பிரித்து ஒதுக்கப்பட்ட காணித்துண்டின் அளவு ஒரு றூட் பத்து பேர்ச் (ஏ0.றூ1.பே10) விஸ்தீரணமான காணி மற்றும் அதில் உள்ள அனைத்தும் அடங்கலாக.

மேலே. குறிப்பிடப்பட்ட லொட் 1 உரிமம் பெற்ற நில அளவையாளர் எஸ். விக்ரமசிங்ஹ என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1987.10.21ஆம் திகதி லொட் ஏ 28உம் மற்றும் உரிமம் பெற்ற நில அளவையாளர் எஸ்.விக்ரமசிங்ஹ என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1987.10.21ஆம் திகதி 3278ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள லொட் ஏ 39 உடன் ஒன்றுசேர்க்கப்பட்டது.

(2) சாலை உரிமையாளர்கள்

(அ) மேலே குறிப்பிடப்பட்ட மக்கானிகொட கிராமத்தில் உள்ள உரிமம் பெற்ற நில அளவையாளர் எஸ். விக்ரமசிங்ஹ என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1987.10.21ஆம் திகதி 3278ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பொல்ஹேன எஸ்டேட் என்று அழைக்கப்படும் காணி லொட் ஏ41 என அடையாளமிடப்பட்டு பிரித்து ஒதுக்கப்பட்ட காணித்துண்டின் அளவு இரண்டு றூட் இருபத்து இரண்டு தசம் எட்டு பேர்ச் (ஏ0.றூ2.பே22.8) விஸ்தீரணமான காணி நிலத்தை சாலை உரிமைக்காக பயன்படுத்துவதற்காக.

(ஆ) மேலே குறிப்பிடப்பட்ட மக்கானிகொட கிராமத்தில் உள்ள உரிமம் பெற்ற நில அளவையாளர் எஸ்.விக்ரமசிங்ஹ என்பவரினால் தயாரிக்கப்பட்ட: 1987.10.21ஆம் திகதி 3278ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பொல்ஹேன எஸ்டேட் என்று அழைக்கப்படும் காணி லொட் ஏ43 என அடையாளமிடப்பட்டு பிரித்து ஒதுக்கப்பட்ட காணித்துண்டின் அளவு ஒரு றூட் எட்டு தசம் ஐந்து பேர்ச் (ஏ0.றூ!.பே8.5) விஸ்தீரணமான காணி நிலத்தை சாலை உரிமைக்காக பயன்படுத்துவதற்காக.

**காணிக்குப் பிரவேசிக்கும் வழி:-** நிட்டம்புவ நகரத்தில் இருந்து கொழும்பு - கண்டி வீதி ஊடாக கண்டியை நோக்கி 81Km. படலிய சந்தி வரை செல்லுங்கள். பிறகு இடது பக்கத்தில் உள்ள கலஹமுனு வீதியில் 75 மீற்றர் தூரம் சென்று வலது பக்கத்தில் உள்ள பொல்ஹேன வத்த வீதி ஊடாக 500 மீற்றர் தூரம் வரை சென்ற பிறகு இந்த சொத்து வலது புறத்தில் அமைந்துள்ளது

**தீர்மான முடிவு அறிவித்தல்கள்:** 2022.06.17ஆம் திகதி இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் வர்த்தமானியிலும் 2022.06.27ஆம் திகதி அத, டெய்லி FT மற்றும் 'தமிழன்' ஆகிய பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

**கட்டணங்கள் செலுத்தும் விதம்-** உத்தேச கொள்வனவாளர் ஏலமுடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாக ஏலதாரருக்குச் செலுத்த வேண்டும்.

(1) கொள்வனவு விலையின் 10%
(2) உள்ளூராட்சி மன்ற வரி 1%
(3) ஏலதாரரின் தரகுப் பணம் 2.5%.
(4) விற்பனை நிபந்தனை உறுதிப்படுத்தலுக்கான நொத்தாரிசுக் கட்டணம் 2500/-
(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணங்கள்
(6) ஏலத்திற்காக செலவு செய்யப்பட்ட முழு விளம்பரச்செலவுகள்

மிகுதி 90 வீதத்தையும், இலங்கை அரசாங்கத்தினாலோ அல்லது வேறு அதிகார சபையினாலோ விதிக்கப்படும் சட்டரீதியான வரி அல்லது கட்டணங்கள் ஏதுமிருப்பின், அவற்றோடு ஏல திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி பீ.எல்.சி. தாபனத்திற்கு செலுத்துதல் வேண்டும்.

மேற்குறிப்பிடப்பட்டவாறு மிகுதிப் பணம் குறிப்பிட்ட திகதிக்கு முன்னால் செலுத்தப்படாதவிடத்து, செலுத்திய பணத்தை திருப்பித் தராமலிருப்பதற்கும் அதே காணியை மறு ஏலவிற்பனை செய்வதற்கும் வங்கிக்கு அதிகாரம் உண்டு.

உரித்துறுதி, ஏனைய ஆவணங்கள் மற்றும் விபரங்களைப் பெற்றுக்கொள்ள கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரிகளிடம் விசாரணைகளை மேற்கொள்ளவும்.

**பிரதான முகாமையாளர், (சட்டம்), செலான் வங்கி பீ.எல்.சி. இலக்கம் 90, காலி வீதி, கொழும்பு 03.**
**தொலைபேசி இலக்கங்கள்: 011-2456475, 011-2456479.**

**எதுவித முன்னறிவித்தலும் இன்றி மேற்படி ஏலவிற்பனையை நடத்துவதற்கும் / இரத்துச் செய்வதற்கும் வங்கிக்கு அதிகாரமுண்டு.**

**சந்திமா பிரியதர்ஷனி கமகே, நீதிமன்ற ஆணையாளர், விலைமதிப்பீட்டாளர் மற்றும் உரிமம் பெற்ற ஏலதாரர்.**
**இல.9-i, ஹைலெவல் வீதி, சர்வோதய மாவத்த, பனாகொட, ஹோமாகம.**
**தொலைபேசி இலக்கம்: 071-4318252 -011-2173282**











# வடக்கு ஆளுநரைக் கண்டித்து மீண்டும் கடிதம் எழுதிய சீ.வி.கே.



(யாழ். நிருபர்)

வடமாகாண ஆளுநரின் நடவடிக்கைகளைக் கண்டித்து, ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு இரண்டாவது தடவையாக வடமாகாண சபை அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் கடிதம் எழுதியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் (03) இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே வடமாகாண சபை அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடமாகாண சபையால் 2017ஆம் ஆண்டில் வடமாகாண சுற்றுலாத்துறை பணியக நியதிச் சட்டம் நிறைவேற்றப்பட்டு, ஆளுநரால் ஒப்புதல் வழங்கப்பட்டு அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு அமுலில் இருக்கையில், அதே விடயத்தில் அதற்கு ஒத்ததான புதிய நியதிச்சட்டமொன்றை உருவாக்கிய ஆளுநரின் செயற்பாடு கேலிக்கூத்தானதாகும்.

ஏற்கனவே ஒரு நியதிச் சட்டம் அமுலில் இருந்தமை பற்றி, அதனை பிரதி பண்ணிய ஆளுநர் மிகத் தெளிவாக அறிந்திருந்தார் என்பது இதனால் வெளிப்படையாகியுள்ளது.

ஆளுநரால் நியதிச் சட்டம் எனக் கூறப்படும் ஆவணத்தின் உள்ளடக்கம் 90 வீதம் மேலே குறிப்பிடப்பட்ட மாகாண சபையால் உருவாக்கப்பட்ட நியதிச் சட்டத்தை ஒத்ததாகவே உள்ளது.

அதிலுள்ள முக்கிய மாற்றம் 'பணியகத்தின் முகாமைத்துவ சபையின் அமைப்பு' தொடர்பானதாகும். ஏனைய உறுப்பினர்களை தமது நோக்கங்களைப் பூர்த்திசெய்வதற்காக வெளியே இருந்து நியமிக்கும் அதிகாரத்தை தமதாக்கிக்கொள்வதற்காக வடமாகாண அமைச்சருக்குள்ள அதிகாரத்தை ஆளுநருக்கு மாற்ற இவ்வாறு செயற்பட்டுள்ளார்.

ஊடகச் செய்திகளின்படி தமது வடமாகாண சுற்றுலாப் பணியகத்தின் தலைவராக சுனில் திசாநாயக்க என்பவரை நியமித்தமையும், அவர் பாய்ந்தடித்து பலாலி விமான நிலையம் இம்மாதம் 12ஆம் திகதிமுதல் மீளவும் சேவைகள் ஆரம்பிக்கும் என ஊடக அறிக்கை வெளியிட்டமையிலிருந்து வெளிப்படையாகிறது.

ஆச்சரியப்படும் வகையில் இதுவும் இலங்கையின் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் தலைவரான முன்னாள் வடமாகாண ஆளுநர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சந்திரசிறியின் அதிகாரங்களை முறையற்ற விதத்தில் தமதாக்கிக்கொண்டமையாகக் காணப்படுகின்றது.

2017ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட நியதிச் சட்டம் இருக்கும்போது அதனை ஒத்த இரண்டு விடயங்களில் மாத்திரம் திருத்தங்களைக் கொண்டு மற்றுமொரு நியதிச் சட்டத்தை உருவாக்க வேண்டிய தேவை ஏன் எழுந்தது என்ற கேள்வி எழுகிறது.

இதில் ஆங்கிலம் மற்றும் தமிழுக்கு இடையில் பல முரண்பாடுகள் கூட காணப்படுகின்றன. புதிதாக ஆளுநர் எதையும் செய்யவில்லை. பழையதையே செய்துள்ளார்.

வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா பதவிக்கு வந்த புதிதில், வடமாகாண சபை சபா மண்டபத்தில் கூட்டத்தை நடத்துவதற்கு அவர் என்னிடம் எழுத்து மூலம் அனுமதி கோரினார். அதனை நான் உடனடியாகவே நிராகரித்து விட்டேன் - என்றார்.

# யாழ். பல்கலையில் இரு டிப்ளோமா கற்கைநெறிகள் புதிதாக ஆரம்பம்



(யாழ். நிருபர்)

வங்கியிலும், நிதியும் டிப்ளோமா மற்றும் தொழில்சார் ஆங்கில டிப்ளோமா ஆகிய இரு டிப்ளோமா கற்கைநெறிகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தின் கீழ் நேற்று முன்தினம் (03) காலை 9 மணியளவில் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெற்றது.

இந்த அறிமுக நிகழ்வில், துணைவேந்தர் பேராசிரியர் சிவக்கொழுந்து சிறிசற்குணராஜா பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு கற்கைநெறிகளை ஆரம்பித்து வைத்தார். நிகழ்வில் முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடாதிபதி பேராசிரியர் பாலசுந்தரம் நிமலதாசன், வங்கியிலும் நிதியும் டிப்ளோமா கற்கைநெறி இணைப்பாளர் பேராசிரியர் திருமதி எல்.கெங்காதரன், தொழில்சார் ஆங்கில டிப்ளோமா கற்கைநெறி இணைப்பாளர் கலாநிதி மு.சண்முகநாதன், பேரவை உறுப்பினர்கள், இலங்கை வங்கியின் உதவிப் பொது முகாமையாளர், வங்கிக் கிளைகளின் முகாமையாளர்கள், பேராசிரியர்கள், சிரேஸ்ட விரிவுரையாளர்கள், திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலைய உத்தியோகத்தர்கள் மற்றும் கற்கைநெறிகளுக்குத் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இந்த கற்கைநெறிகளுக்கான வளவாளர்களாக அந்தந்த துறைகளில் தேர்ச்சிபெற்ற தொழில்சார் வல்லுனர்கள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

சமூகத்தின் தேவையைச் செவ்வனே உணர்ந்து, அச்சமூகப் பொறுப்பை நிறைவேற்றும் ஒரு செயற்பாடாக இந்த இரு டிப்ளோமா கற்கைகளையும் யாழ்ப்பாண பல்கலைக்கழகம் ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்நிகழ்வின்போது உரையாற்றிய துணைவேந்தர் பேராசிரியர் சிவக்கொழுந்து சிறிசற்குணராஜா, இந்தக் கற்கைநெறிகளின் முக்கியத்துவம், அதை எவ்வாறு சமூகப் பெறுப்புணர்வுடன் நிறைவேற்ற திட்டமிடப்பட்டுள்ளது, கற்கைநெறிகளின் முடிவில் மாணவர்கள் பெறக்கூடிய நன்மைகள் என்பவற்றைக் குறித்துரைத்திருந்தார். நாட்டின் பொருளாதார நிலை, அதற்காக நாம் ஒவ்வொருவரும் ஆற்றவேண்டிய பங்களிப்பு பற்றியும் அவர் தனது உரையில் தெளிவுபடுத்தியிருந்தார்.

# யாழ். திரைக்கு வந்தது 'பாலைநிலம்' திரைப்படம்



ஈழத்தில் உருவாக்கப்பட்டுள்ள 'பாலைநிலம்' திரைப்படம் நேற்று முன்தினம் (03) யாழ்ப்பாணம் ராஜா திரையரங்கில் திரையிடப்பட்டது.

ஜூட் சுகியின் இயக்கம் மற்றும் ஒளிப்பதிவில் தாயக மண் வாசனையுடன் உருவாகியுள்ள 'பாலைநிலம்' திரைப்படம் யாழ்ப்பாணம் ராஜா திரையரங்கில் நேற்று முன்தினம் (03) மாலை 6.30 மணிக்கு சிறப்புக்காட்சியாக திரையிடப்பட்டது. படம் திரையிடல் ஆரம்ப நிகழ்வில் யாழ். மாநகர சபை முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன், மாநகர சபை ஆணையாளர் ஜெயசீலன், உறுப்பினர், திரைப்பட கலைஞர்கள் உள்ளிட்டவர்கள் விருந்தினர்களாக கலந்துகொண்டிருந்தனர்.

'பாலைநிலம்' திரைப்படத்தில் ரத்னகாந்தன், அபர்ணா, ராஜா மகேந்திரசிங்கம், மகாலிங்கம், விமல் ரோய், ஷாஜா, லச்சா, விமலரூபன் உள்ளிட்ட பலர் நடித்திருக்கின்றனர்.

இந்தத் திரைப்படத்திற்கான இசை - பிரசாந்த் கிருஷ்ணபிள்ளை. படத்தொகுப்பு - நிவேன், கிராபிக்ஸ் தங்கவேல் சிவநேசன் மேற்கொண்டுள்ளனர்.



**மருத்துவப் பொருட்களின் பற்றாக்குறையை கருத்திற்கொண்டு அண்மையில் சந்நிதியான் ஆச்சிரமத்தால் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் புற்றுநோய் பிரிவிற்கு எட்டு இலட்சம் ரூபா பெறுமதியான மருத்துவப் பொருட்கள் சந்நிதியான் ஆச்சிரமத்தைச் சேர்ந்த கலாநிதி மோகன தாஸ் சுவாமிகளால் வைத்தியசாலை நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டது. (சாவகச்சேரி நிருபர்)**

# நுவரெலியாவில் சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினம்



(நுவரெலியா மேலதிக நிருபர்)

சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தினம் நேற்று முன்தினம் (03) நாடளாவிய ரீதியில் பல இடங்களில் அனுஷ்டிக்கப்பட்டது. இதனை முன்னிட்டு நுவரெலியாவில் அன்றைய தினம் பல இளைஞர் கழகங்கள் இணைந்து விழிப்புணர்வு ஊர்வலத்தை நடத்தின.

மாற்றுத்திறனாளிகளின் உரிமைகள் குறித்து பொதுமக்களின் கவனத்தை ஈர்க்கும் வகையில் மாற்றுத்திறனாளி மாணவர்களை பாடசாலையில் சேர்ப்பதன் அவசியம் மற்றும் அவர்கள் ஒதுக்கப்படுவது தொடர்பான விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு மாணவர்கள் நுவரெலியாவின் முக்கிய வீதிகள் வழியாக சென்றனர்.

அத்துடன், நுவரெலியா பிரதான பஸ் நிலையத்திற்கு எதிரில் மாற்றுத்திறனாளிகளை 'பாடசாலை சமூகம் ஏற்றுக்கொள்ள வேண்டும்' என்ற தொனிப்பொருளில் விழிப்புணர்வு வீதி நாடகமும் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

# போதைப்பொருளைத் தடுக்கத் திராணியற்ற சி.ஐ.டிக்கு தோட்டத்தில் என்ன வேலை?

## ஜீவன் தொண்டமான் எம்.பி. கேள்வி

(எஸ்.கணேசன்)

நாட்டை மீட்பதாகக் கூறியே தம்மிக்க பெரேரா நாடாளுமன்றம் வந்தார். ஹொரண பெருந்தோட்ட நிறுவனம் அவருக்குரியது. அத்தோட்ட மக்களை பாதுகாக்காத தம்மிக்க பெரேரா, நாட்டை எவ்வாறு மீட்பார் என்று இ.தொ.கா. பொதுச்செயலாளரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் கேள்வி எழுப்பியுள்ளார்.



அத்துடன், சி.ஐ.டியினரை களமிறக்கி தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடும் தொழிலாளர்களை அச்சுறுத்தும் செயலை தோட்ட நிர்வாகங்கள் உடன் நிறுத்தாவிட்டால் தக்க பாடம் புகட்டப்படும் எனவும் அவர் எச்சரித்தார். ஹட்டன் – கொட்டகலை சீ.எல்.எப். காரியாலயத்தில் கடந்த 4ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஹொரண பெருந்தோட்ட நிறுவனம், தொடர்ச்சியாக அத்துமீறல்களில் ஈடுபட்டு வருகின்றது. தொழில் சட்டங்கள் மதிக்கப்படுவதில்லை. தொழிலாளர்கள் மிரட்டப்படுகின்றனர். இதற்கு இடமளிக்கமுடியாது. மஸ்கெலியா கவரவில தோட்டத்தில் தொழிலாளர்களின் விவசாய நிலங்கள் பறிக்கப்பட்டுள்ளன. இதற்கு எதிராக தொழிற்சங்க நடவடிக்கையில் இறங்கியுள்ளோம். தொழிலாளர்களுக்கு தீர்வு கிடைக்கும்வரை ஒரு கிராம் கொழுந்தைக்கூட வெளியேற்ற இடமளிக்கமாட்டோம். கம்பனிகள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டால் அது அவர்களுக்கே பாதிப்பு. தேயிலை ஏலத்துக்கு உரிய நேரத்தில் உற்பத்தியை வழங்காவிட்டால் அவர்கள்தான் சட்ட சிக்கலை சந்திக்க நேரிடும். எனவே, எமது போராட்டம் தொடரும்.

இந்நிலையில் கவரவில தோட்டத்தில் சி.ஐ.டியினரை களமிறக்கி, தொழிலாளர்களை தோட்ட நிர்வாகம் மிரட்டுகிறது. தொழிற்சங்க நடவடிக்கையை பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு செல்ல முடியாது. ஆனாலும் அங்குள்ள தோட்ட அதிகாரி தனது தனிப்பட்ட பலத்தை பிரயோகிக்கின்றார். அதற்கு நாம் அஞ்சப் போவதில்லை. மலையகத்தில் மாணவர்களுக்கு விற்கப்படும் ஐஸ் போதைப்பொருளை தடுப்பதற்கு திராணியற்ற சி.ஐ.டிக்கு, தோட்டத்தில் என்ன வேலை?

சிவகுமார் என்ற 3 பிள்ளைகளின் தந்தையான தோட்டத்தொழிலாளி மின்சாரம் தாக்கி, ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்றுவருகின்றார். ஆனால், தோட்ட நிர்வாகம் பொறுப்புக் கூறாமல், உயிருக்கு பேரம் பேசுகின்றது. எனவே, ஹொரண பிளான்டேஷனுக்கு எதிராக எமது போராட்டம் தொடரும் - என்றார்.

# க.பொ.த. சா/த பரீட்சையில் நானுஓயா டெஸ்போட் பாடசாலை 77வீத சித்தி

(நுவரெலியா மேலதிக நிருபர்)

2021ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையின் பெறுபேறுகள் அண்மையில் வெளியாகியிருந்தன. இதனடிப்படையில், நானுஓயா டெஸ்போட் தமிழ் வித்தியாலய மாணவர்கள் 77 வீத சித்தியைப் பெற்றுள்ளனர். கடந்த 27 வருடகால பாடசாலை வரலாற்றில் முதன்முறையாக 77 வீத சித்தியை இப்பாடசாலை பெற்றுள்ளது. கடந்த 2020ஆம் ஆண்டு 66 வீத சித்தியை இப்பாடசாலை பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இது குறித்து பாடசாலை அதிபர் எஸ்.சிவபாலசுந்தரம் கருத்து தெரிவிக்கையில்,

2021 க.பொ.த. சா/த பரீட்சை முடிவுகளுக்கு அமைய, கணிதம் உட்பட 8 பாடங்களில் எமது மாணவர்கள் 77 வீத சித்தியைப் பெற்றுள்ளனர். தமிழ், கணிதம், சமயம், ஆங்கிலம், வரலாறு போன்ற பாடங்களில் சிறந்த சித்தி கிடைக்கப் பெற்றுள்ளது. இப்பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற சகல மாணவர்களுக்கும் கற்பித்த ஆசிரியர்களுக்கும் எனது பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் பாடசாலை சமூகம் சார்பாக தெரிவித்துக்கொள்கிறேன் என்றார்.

# சர்வதேச ஓட்டவீரர் சத்தியசீலனுக்கு கௌரவம்

(இராகலை நிருபர்)

உடப்புஸ்ஸல்லாவை எமஸ்ட் தோட்டத்தைச் சேர்ந்த ஓட்டப்பந்தய வீரரான மணிவேல் சத்தியசீலனுக்கு உடப்புஸ்ஸலாவை ஏபர்நெட் ஆடைத்தொழிற்சாலை முகாமையாளர் சுதத் நாகஸ்ஹேன தலைமையில் மாபெரும் கௌரவிப்பு நிகழ்வொன்று கடந்த 2ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆடைத்தொழிற்சாலையில் இடம்பெற்றது.

இந்தியாவின் ஆந்திரா மாநிலத்திலுள்ள உடுப்பி மற்றும் பெங்களூர், கோவா ஆகிய நகரங்களில் எதிர்வரும் டிசம்பர் மற்றும் ஜனவரி மாதங்களில் பல்வேறு வகையான மெய்வல்லுனர் போட்டிகள் நடைபெறவுள்ளன. இதில் சர்வதேச வீர, வீராங்கனைகள் கலந்துகொள்ளவுள்ள நிலையில் மணிவேல் சத்தியசீலனும் கலந்துகொள்ளவுள்ளார். தேசிய, சர்வதேச மெய்வல்லுனர் போட்டிகளில் இலங்கைக்கு பல்வேறு தங்கப் பதக்கங்களைப் பெற்றுத் தந்தவர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.



எதிர்வரும் 09ஆம் திகதி இந்தியாவுக்குப் பயணிக்கவுள்ள இவருக்கு உற்சாகமளிக்கும் வகையிலேயே இந்த கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது. அவருக்கான பிரயாணச்செலவு உள்ளிட்ட அனைத்து செலவுகளையும் வழங்க உடப்புஸ்ஸலாவை ஏபர்நெட் ஆடைத்தொழிற்சாலை நிர்வாகமும் ஊழியர்களும் முன்வந்துள்ளனர்.

இதன்போது மணிவேல் சத்தியசீலனுக்கு மதகுருமார், விளையாட்டு பயிற்சியாளர்கள் உள்ளிட்ட அனைவரும் ஆசியும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொண்டதுடன் அவருக்கான அனுசரணை சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டு கௌரவமளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் மதகுருமார், அரசியல் பிரமுகர்கள், வர்த்தகர்கள், ஆசிரியர்கள், விளையாட்டு வீரர்கள் மற்றும் சமூக நலன் விரும்பிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.



மடுல்சீமை அருள்மிகு ஸ்ரீ செல்வவிநாயகர் ஆலய அறநெறிப் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா கடந்த 3 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற்றது. இதன்போது இடம்பெற்ற கலாசார ஊர்வலம், கலைநிகழ்வுகள், பரிசளிப்பு நிகழ்வு மற்றும் கலந்துகொண்டோரை படங்களில் காணலாம். (பசறை நிருபர்)

# சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்புக்காக புதிய கையடக்கத் தொலைபேசிச் செயலி

## அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ




சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் போது இந்நாட்டுக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்புக்காக புதிய கையடக்கத் தொலைபேசி செயலியொன்றை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக சுற்றுலாத் துறை மற்றும் காணி அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

சுற்றுலாத்துறை மற்றும் காணி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு அமைச்சரின் தலைமையில் அண்மையில் (30) நாடாளுமன்றத்தில் கூடியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

நாட்டின் சுற்றுலாத்துறையின் மேம்பாடு தொடர்பில் எடுக்கப்பட்டுள்ள மற்றும் எதிர்பார்க்கப்படும் நடவடிக்கைகள் குறித்து விளக்கமளிக்கும்போது அமைச்சர் இதனைக் குறிப்பிட்டதுடன், ஜனவரி முதல் இந்தக் கையடக்கத் தொலைபேசிச் செயலியை பயன்படுத்த முடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

அதேபோன்று, இந்தச் செயலி மூலம் சுற்றுலாப் பயணிகள் விரும்பினால் அவர்கள் இருக்கும் இடத்தை நோக்குவதற்கு அனுமதி வழங்குதல், அவர்கள் தொலைந்துபோனால் அல்லது ஏதாவது பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்கவேண்டி ஏற்பட்டால் அதன்மூலம் அதனை மேற்கொள்ள முடியும் என அமைச்சர் விளக்கமளித்தார்.

மேலும், சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்புக்காக சுற்றுலாப் பயணிகளைக் கவரும் ஒவ்வொரு கடற்கரைப் பகுதிகளிலும் சுற்றுலா பொலிஸ் அணியொன்றை நிறுத்த நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

விசேடமாக 2023இல் 15 இலட்சம் சுற்றுலாப் பயணிகளை வரவழைக்க திட்டமிட்டுள்ளதாகவும் ஹரின் பெர்னடோ இதன்போது தெரிவித்தார்.

அதேபோன்று, காணி அளவிடும் நடவடிக்கைகள் தாமதமடைவது தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டதுடன், இந்த அளவிடும் பணிகளை வெளித் தரப்பினரைக்கொண்டு மேற்கொள்ள முடியுமா என பரிசீலித்து விரைவில் இந்த அளவிடும் பணிகளை நிறைவுசெய்ய நடவடிக்கை எடுக்குமாறும் அமைச்சர் தெரிவித்தார். இது தொடர்பான அறிக்கையொன்றை அடுத்த குழுக் கூட்டத்தில் சமர்ப்பிக்குமாறும் அமைச்சர் பரிந்துரைத்தார்.

இவற்றுக்கு மேலதிகமாக பல்வேறு மாவட்டங்களில் காணப்படும் காணிகள் சம்பந்தப்பட்ட சிக்கல்கள் மற்றும் சுற்றுலாத்துறை மேம்பாடு தொடர்பிலும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் இராஜாங்க அமைச்சர்களான பியல் நிஷாந்த டி சில்வா, ஜகத் புஷ்பகுமார, சாந்த பண்டார, அனுப பஸ்குவல், நாடாளுமன்ற உறுப்பினர்களான அசங்க நவரத்ன, சந்திம வீரக்கொடி, (மேஜர்) சுதர்ஷன தெனிபிடிய, கபில அத்துகோரல, கருணாதாச கொடிதுவக்கு, டி. வீரசிங்க, வசந்த யாப்பா பண்டார, எஸ்.எம்.எம்.முஷாரப், உதயன கிரிந்திகொட, உபுல் மஹேந்திர ராஜபக்ஷ, இசுறு தொடங்கொட, ஜகத் குமார சுமித்ராச்சி, சுதத் மஞ்சுள, எம்.ராமேஸ்வரன், சுஜித் சஞ்சய பெரேரா மற்றும் குமாரசிறி ரத்நாயக்க ஆகியோர் கலந்துகொண்டனர்.








மலையக கலாசார ஒன்றியத்தின் ஏற்பாட்டில் அமரர் தர்ஷன் தர்மராஜின் நினைவாக வெள்ளவத்தை இராமகிருஷ்ணா தமிழ் வித்தியாலயத்தில் இலவச ஊடகக் கருத்தரங்கு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது. (படப்பிடிப்பு: ம. அகிலேஸ்)

## ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் ஊடகக் கருத்தரங்கு பாணந்துறையில்





(அஷ்ரப் ஏ சமத்)

21ஆம் நூற்றாண்டில் ஊடகம் என்ற தொனிப்பொருளில் பாடசாலை மாணவர்களுக்காக நாத்தப்படுகின்ற ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் 72ஆவது ஊடகக் கருத்தரங்கு நேற்று முன்தினம் (03) முழு நாள் கருத்தரங்காக பாணந்துறை அல்-பஹ்ரியா தேசிய பாடசாலையில் நடைபெற்றது

ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவி புர்கான் பீ.இப்திகார் தலைமையில், பாணந்துறையிலுள்ள 6 பாடசாலைகளின் தமிழ் மொழி மூலமான 100இற்கும் மேற்பட்ட சிரேஷ்ட மாணவ மாணவிகள் கலந்துகொண்டனர்.

பாணந்துறை அல்-பஹ்ரியா தேசிய பாடசாலையின் 97 பிரிவு மாணவர் களின் ஏற்பாட்டில் நடைபெற்ற இக்கருத் தரங்கில், சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் இலங்கையிலுள்ள பாகிஸ்தான் துதுவராலயத்தின் ஊடகச் செயலாளர் கல்சூம் ஜிலானி பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

கௌரவ அதிதியாக ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் முன்னாள் தலைவரும் ஆலோசகருமான என்.எம்.அமீன், பானந்துறை எழுத்தாளர்கள், ஊடகவியலாளர், அகதியா அமைப்பாளர், பாணந்துறை அஸ்வர், யாழ் எழுத்தாளர் கலாபூஷணம் பரீட் இக்பால் மற்றும் கல்லூரியின் ஆசிரியர்களும் கலந்து சிறப்பித்தனர்

இந்நிகழ்வை இக் கல்லூரியின் பழைய மாணவிகள், 97ஆவது குழுவின் நிர்வாக உறுப்பினர்கள் ஏற்பாடுகளை செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சவூதி அரேபிய தூதுவர் சபாநாயகருடன் சந்திப்பு




இலங்கைக்கான சவூதி அரேபிய தூதுவர் காலித் ஹமத் நஸார் அல்தஸம் அல்கஹ்தானி (Khalid Hamoud Nasser Aldasam Alkahtani) சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவை அண்மையில் (29) நாடாளுமன்றத்தில் சந்தித்தார்.

சவூதி அரேபியாவில் அதிக சம்பளம் பெறும் வெளிநாட்டுப் பணியாளர்களில் பெரும்பாலான இலங்கையர்கள் உள்ளதாக தூதுவர் தெரிவித்தார். சவூதி அரேபியாவில் பயிற்றப்பட்ட பணியாளர்களுக்கு பல சந்தர்ப்பங்கள் காணப்படுவதாகவும் இலங்கை பணியாளர்களை பயிற்றுவிப்பதற்கு தொழிற்பயிற்சி நிலையமொன்றை உருவாக்குவதற்கு தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணாயக்காரவுக்கு முன்மொழிந்ததாக தூதுவர் மேலும் தெரிவித்தார்.

இலங்கை மற்றும் சவூதி அரேபியாவுக்கிடையிலான எதிர்கால முதலீடுகள் மற்றும் வேலைவாய்ப்பு சந்தர்ப்பங்கள் தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

சவூதி அரேபியா இலங்கைக்குத் தொடர்ந்து வழங்கும் ஒத்துழைப்பைப் பாராட்டிய சபாநாயகர், அந்த நட்புறவை மேலும் விருத்தி செய்துகொள்ள எதிர்பார்ப்பதாகத் தெரிவித்தார்.

நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்கவும் இச்சந்திப்பில் கலந்துகொண்டார்.






கட்டைக்காடு புனித. சவேரியார் ஆலயத்தின் வருடாந்த திருவிழா திருப்பலியானது நேற்று முன்தினம் (03) பங்குத்தந்தை வண.வின்சன் ஜெயராசா அடிகள் தலைமையில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இத் திருப்பலியில் உதவிப் பங்குத்தந்தை வண.டிசான் அடிகள் மற்றும் முன்னாள் பங்குத்தந்தை வண. டன்டர் அடிகளார் உட்பட வருகை தந்த அருட்தந்தை, அருட்சகோதரிகளான வண.அமிர்தா, வண.சயந்தி என அனைவரும் கலந்து மிகச் சிறப்பாக திருவிழா திருப்பலியை ஒப்புக்கொடுத்தனர். திருவிழா திருப்பலியில் பங்கு மக்கள் அனைவரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர். (படங்கள்:- உடப்பு செய்தியாளர்)





## Manager / Assistant Manager (Engineering) / Deputy General Manager/ Assistant Accountant/ Assistant Manager (Legal)

Institution: Lanka Sathosa Limited

Apply: The Chairman, Lanka Sathosa Limited, No. 27, CWE Secretariat Building, Vauxhall Street, Colombo 02.

## Computer Assistant - Open to all interested applicants (Female / Male)

Institution: US Embassy Colombo

Basic Function of the Position: Under the supervision of the Systems Manager, manages the Embassy's computer operations and serves as a technical, Local Area Network (LAN) administrative advisor to the Systems Manager, on all computer-related issues. Serves as the primary training specialist for training users in new operating systems, productivity software, Department of State developed software and mobile devise usage, for one-on-one and one-to-many training presentations. Provides technical guidance and desk-side support and computer expertise to all the Embassy users to ensure proper utilization of mission IT resources.

Requirements: Minimum of 4 years' work experience performing progressively more responsible work in the management, administration and utilization of computer systems and networks, PC support programming, hardware and software troubleshooting, training users on Windows workstation and MS Office applications is required.

For more information on how to apply visit the Mission web site: (https://lk.usembassy.gov/embassy/jobs/)

## Security Guard - Fixed Term: 18 Months (Female/Male)

Institution: US Embassy Colombo

Basic Function of Position: Perform Guard services to safeguard New Embassy Compound/U.S Government property, personnel and observe area to protect property from fire damage or theft.

Major Duties and Responsibilities:

1. Prevent entry of unauthorized persons to New Embassy Compound and U.S. Government buildings.
2. Check persons and Vehicles desiring entry to New Embassy Compound/U.S. Properties.
3. Protect New Embassy Compound/ U.S. Government Property from fire, damage and theft.
4. Provide suitable information to Local Guard Force members regarding suspicious persons and vehicles movements.

For more information on how to apply visit the Mission web site: https://lk.usembassy.gov/embassy/jobs/

## Health and Nutrition Manager

Institution: Unicef

Requirements: University Degree on relevant field, Two years of experience

Apply: http:jobs.unicef.org/cw/en-us/jobs/557620

## Assistant Showroom Manager

A well reputed company involved in fair trade.

Key Requirements.

- Assist the showroom manager in planning and implementing strategies to attract customers
- Co-ordinate daily customer service operations
- Track the progress and annual objectives
- Monitor and maintain store inventory
- Evaluate employee performance and identify hiring and training needs

Candidate profile

- 2 years experience in customer service
- Fluent in English and Sinhala/Tamil

Attractive remuneration will be provided for selected candidate.

Interested candidates can apply by sending their CVs to recruitmentbconnected@gmail.com

Contact us on +94 776 371 134 | +94 777328 123.

BConnected (Pvt) Ltd.

No: 07, Skelton Gardens,

Colombo 05.

## சீனாவில் தீவிரமடையும் மக்கள் போராட்டம்

# கொரோனா கட்டுப்பாடுகள் தளர்வு; 20 இலட்சம் பேர் உயிரிழக்கும் அபாயம்



### மருத்துவ கண்காணிப்பு நிபுணர்கள் எச்சரிக்கை

சீனாவில் கொரோனா கட்டுப்பாடுகளுக்கு எதிராக மக்கள் போராட்டம் தீவிரமடைந்ததால், கட்டுப்பாடுகளை அந்நாட்டு அரசு தளர்த்தியுள்ளது. இதேவேளை, ''சீனாவில் கொரோனா கட்டுப்பாடுகளை தளர்த்தினால் 20 இலட்சத்துக்கும் மேற்பட்டோர் உயிரிக்க நேரிடும். கொரோனா பாதிப்பு எண்ணிக்கை 23 கோடியாக அதிகரிக்கும்'' என சீன மருத்துவ கண்காணிப்பு நிபுணர்கள் எச்சிக்கை விடுத்துள்ளார்.

சீனாவில் கொரோனா தொற்றுக்கு தினமும் 40 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டு வருகின்றனர். இந்தப் பரவலை தடுக்க பல நகரங்களில் ஊரடங்கு, கடும் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளன. இதனால் அந்நாட்டு ஜனாதிபதி ஸி ஜின்பிங்கை பதவி விலகக்கோரி நாடு முழுவதும் போராட்டங்கள் தீவிரமடைந்துள்ளன. மாணவர்களும், அரசுக்கு எதிராக நூதன போராட்டத்தில் இறங்கியுள்ளதால் பல்கலைக்கழகங்களுக்கு விடுமுறை அளிக்கப்பட்டு, அனைவரும் வீட்டுக்கு அனுப்பப்பட்டு வருகின்றனர். போராட்டம் தீவிரமடைந்ததால் பீஜிங், ஷிஜியாங்சுவாங், தையூன் உட்பட பல்வேறு நகரங்களில் கொரோனா கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளன.

தொழில்துறை நகரமான குவாங்சோவில் தனிமைப்படுத்துபவர்களை தற்காலிக முகாம்களில் தங்கவைப்பதற்குப் பதிலாக வீட்டிலேயே தனிமைப்படுத்திக்கொள்ளலாம் என்று கடந்த சில நாட்களுக்கு முன் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், பீஜிங், தியான்ஜின், செங்டு மற்றும் ஷென்சென் போன்ற நகரங்களில் பொது போக்குவரத்துக்கான கட்டாய கொரோனா பரிசோதனைகள் இரத்துசெய்யப்பட்டுள்ளன. செங்டு மற்றும் குவாங்சோவில் வசிப்பவர்கள், பெரும்பாலான பொது இடங்களுக்குள் நுழையும்போது கொரோனா சோதனை முடிவுகளைக் காட்டத் தேவையில்லை என்று சீன அரசின் அதிகாரப்பூர்வ ஊடகம் தெரிவித்துள்ளது. இருப்பினும், மக்கள் மாஸ்க் அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. பீஜிங்கில் பல்பொருள் அங்காடிகள் திறக்கப்பட்டுள்ளன.

**சீன மருத்துவ கண்காணிப்பு நிபுணர்கள் எச்சரிக்கை**

''சீனாவில் கொரோனா கட்டுப்பாடுகளை தளர்த்தினால் 20 இலட்சத்துக்கும் மேற்பட்டோர் உயிரிக்க நேரிடும். கொரோனா பாதிப்பு எண்ணிக்கை 23 கோடியாக அதிகரிக்கும்'' என சீன மருத்துவ கண்காணிப்பு நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த 3 ஆண்டுகளாக கொரோனா தொற்றைச் சந்தித்துள்ள சீனாவில், நாளொன்றில் கொரோனா தொற்று முன்னெப்போதும் இல்லாத வகையில் அதிகரித்துள்ளது.

இந்நிலையில், தீவிர கொரோனா கட்டுப்பாடுகள், ஊரடங்கால் வெறுப்படைந்த சீன மக்கள் அரசுக்கு எதிராக தீவிர போராட்டத்தில் கடந்த ஒரு வாரமாக ஈடுபட்டுள்ளனர். சீனாவின் பீஜிங் நகரிலுள்ள தினான்மென் சதுக்கத்தில் கடந்த 1989ஆம் ஆண்டு நடந்த போராட்டத்துக்குப் பின், சீனாவில் தற்போதுதான் மக்கள் மிகப் பெரியளவில் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

இதனால் தீவிர கொரோனா கட்டுப்பாடுகளையும், ஊரடங்கு விதிமுறைகளையும் சீன அதிகாரிகள் தளர்த்தியுள்ளனர்.

இதுகுறித்து, சீனாவின் குவான்சி மாகாண நோய் கட்டுப்பாட்டு மையத்தின் தலைவர் ஜோ ஜியாடாங் தெரிவிக்கையில்,

''சீனாவில் கொரோனா கட்டுப்பாடுகளை தளர்த்தினால் 20 இலட்சத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழக்க நேரிடும். கொரோனா பாதிப்பு எண்ணிக்கை 23 கோடியாக அதிகரிக்கும்'' என கூறியுள்ளார்.

'நேச்சர் மெடிசன்' என்ற இதழில் அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள் அளித்துள்ள பேட்டியில், ''தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகளை சீன அரசு தீவிரப்படுத்தாமல், கொரோனா கட்டுப்பாடுகளை நீக்கினால், 15 இலட்சத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழப்பர்'' என தெரிவித்துள்ளனர்.

# ஹரி - மேகனுக்கு உயரிய சமத்துவ விருது



பிரித்தானிய அரச குடும்பத்தை விட்டு வெளியேறிய ஹரி - மேகன் தம்பதிக்கு உயரிய சமத்துவ விருது நாளை 6ஆம் திகதி வழங்கப்படவுள்ளது. மேலும், அரண்மனையில் நடந்த இனவெறி பாகுபாடு குறித்த தொடரும் விரைவில் வெளியாகவுள்ளது.

பிரித்தானிய இளவரசர் ஹரி, கடந்த சில ஆண்டுகளுக்கு முன் ஆபிரிக்க வம்சாவளியைச் சேர்ந்த அமெரிக்கரும், ஹொலிவுட் நடிகையுமான மேகன் மார்க்கல்லை காதலித்து திருமணம் செய்துகொண்டார்.

தம்பதியர் அரச குடும்பத்துடன் சேர்ந்து வாழ்ந்தனர். திடீரென இளவரசர் - இளவரசி தம்பதி தங்களது அரச குடும்பத்தின் அனைத்து பதவிகளிலிருந்து விலகுவதாக அறிவித்தனர். இதுகுறித்து அமெரிக்காவின் புகழ்பெற்ற தொலைக்காட்சி தொகுப்பாளர் ஓபரா வின்ப்ரேவுக்கு இருவரும் பேட்டியளித்தனர். அப்போது மேகன் மார்க்கல் தெரிவிக்கையில்,

''நான் கர்ப்பமாக இருந்தபோது, பிறக்கப்போகும் குழந்தையின் நிறம் எப்படி இருக்குமோ என்று அரச குடும்பத்தினர் கவலைபட்டனர். பிறக்கும் குழந்தைக்கு அரச குடும்ப பாதுகாப்பு வழங்கப்படாது என்றும், இளவரசர் பட்டம் சூட்டப்படாது என்றெல்லாம் பேசினர். இவர்களது இந்த பேச்சால், தீவிரமான மன அழுத்தத்திற்கு ஆளானேன். பலமுறை தற்கொலை செய்து கொள்ளலாமா என்றும் யோசித்தேன். என்னிடம் உளவியல் சிக்கல் இருப்பதாக அரச குடும்பத்தினரிடம் கூறினேன். ஆனால், அவர்கள், நீங்கள் அரச குடும்பத்தின் ஊழியர் அல்லர். எனவே, உதவ முடியாது என்று கூறிவிட்டனர்'' - என்றார். இதனைத் தொடர்ந்து இளவரசர் ஹரி அளித்த பேட்டியில், ''மேகனுக்கு ஏற்பட்ட நெருக்கடியின்போது, என்னால் எதுவும் செய்ய முடியவில்லை. அரச குடும்பத்தில் சிக்கியிருந்த நான், என் தந்தை, அண்ணன் வில்லியம்ஸ் ஆகியோரும் பிரச்சினையை எதிர்கொண்டனர். அரண்மனையை விட்டு வெளியேறிய பின்னர் எனது தந்தை, என்னிடம் பேசுவதையே நிறுத்திவிட்டார்'' - என்றார். இவர்களின் பேட்டியை தொடர்ந்து, கடந்த 2020ஆம் ஆண்டு தம்பதிக்கு அளித்த நிதியுதவியை பெக்கிங்ஹாம் அரண்மனை நிறுத்தியது.

அரச குடும்பத்தில் இன்வெறி பார்க்கப்படுவதாக இளவரசரே குற்றஞ்சாட்டி, அரச குடும்பத்திலிருந்து விலகினார். சமத்துவத்தை விரும்புபவர்கள் இந்தத் தம்பதிகளை பாராட்டினர். அவர்களுக்கு மனித உரிமைகளுக்கான உயரிய விருது அறிவிக்கப்பட்டது. சமூக மாற்றத்திற்கான சமத்துவம், நீதி மற்றும் மனித உரிமைகளைப் பாதுகாக்க உழைப்பவர்களுக்கு 'ரொபர்ட் எவ் கென்னடி ரிப்பிள் ஓவ் ஹோப்' விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன. அந்த விருதுகள் நாளை 6ஆம் திகதி ஹாரி - மேகன் மார்கல் தம்பதியினருக்கு வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டது. இதற்கிடையே ஹாரி - மேகன் மார்க்கல் குறித்த ஆவண தொடர் தயாரிக்கப்பட்டு வந்தது. அதன் ட்ரெய்லர் கூட வெளியாகியுள்ளது. 'ஹாரி எண்ட் மேகன்' என பெயரிடப்பட்ட அந்த ஆவண தொடரில் பிரித்தானிய அரச குடும்பத்தில் ஏற்பட்ட அனுபவங்கள் காட்சிப்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## அரச வேலை....

# எலிகளைப் பிடித்துக் கொடுத்தால் ஆண்டுக்கு 1.38 கோடியை அள்ளலாம்



எலிகளைப் பிடிக்க ஒரு கோடியே 38 இலட்சம் ரூபா (இந்திய ரூபாப்படி) சம்பளமாக வழங்கப்படும் என்ற அறிவிப்பு வியப்பை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்காவில் எலிகளின் தொல்லை அதிகமாகவுள்ள நகரங்களில் ஒன்று நியூயோர்க். இந்த ஆண்டில் மட்டும் எலித் தொல்லைகள் எனக்கூறி 21,600 முறைப்பாடுகள் மாவட்ட நிர்வாகத்திடம் குவிந்தது. அனைத்து இடங்களிலும் எலித் தொல்லைகள் அதிகரித்ததால் பொதுமக்கள் பொறுமை இழந்து மாநகர நிர்வாகத்திற்குக் கடிதங்களை அனுப்பி வருகின்றனர்.

இதனைத் தொடர்ந்து நியூயோர்க் நகர மேயர் எரி ஆடம்ஸ் எலிகளை ஒழிக்க புதிய பதவியை உருவாக்கியுள்ளார். மேலும் இதற்கான ஆட்சேர்ப்பு நடவடிக்கையையும் வெளியிட்டுள்ளார். எலிகளை ஒழிக்கும் பணிக்கு 'எலிகளை ஒழிப்பதற்கான இயக்குநர்' எனும் பெயரை வைத்துள்ளனர். பணிக்கான தகுதிக் குறிப்புகளாக நகைச்சுவை உணர்வு கொண்டவர்கள், எலியைக் கட்டுப்படுத்தும் பணிக்கு புதிய உத்திகளை உருவாக்குபவர்கள் மேலும் இளங்கலை பட்டப்படிப்பு முடித்தவர்கள் இந்தப் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்.

பணியில் சேர்பவர்களுக்கு ஆண்டுக்கு ஒரு இலட்சத்து 70 ஆயிரம் டொலர் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்திய மதிப்பில் ஆண்டுக்கு ஒரு கோடியே 38 இலட்சம் ரூபா சம்பளமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மாத மதிப்பில் 11 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா. இது குறித்த அறிவிப்பு வெளியானதும் நியூயோர்க் நகர மக்கள் இது குறித்து கேலி வீடியோக்களை இணையத்தில் பதிவேற்றி வருகின்றனர்.

## உலக செய்திகள்

# 'B-21' அதிநவீன அணுகுண்டு வீச்சு விமானத்தை அறிமுகப்படுத்திய அமெ.



B-21 என்ற அதிநவீன அணுகுண்டு வீச்சு விமானத்தை அமெரிக்கா அறிமுகப்படுத்தியுள்ளது.

கலிபோர்னியாவின் பாம்டேலில் நடைபெற்ற நிகழ்ச்சியில் இந்த விமானம் முதன்முதலாக அறிமுகப்படுத்தப்பட்டது.

நொர்த்ரோப் க்ரம்மன் தயாரித்த இந்த B-21 விமானம் மூலம் உலகின் எந்த இடத்திலும் துல்லியமான தாக்குதல் நடத்த முடியும் எனவும், எதிரி நாட்டின் மிகவும் அதிநவீன வான் பாதுகாப்பு அமைப்புகள்கூட B-21 விமானத்தை வானில் கண்டறிவது சிரமம் எனவும் கூறப்படுகிறது.

# மீனவர் குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலில் மூவர் வெட்டுக்காயங்களுடன் வைத்தியசாலையில்

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை, கொட்பே மீன்பிடி துறைமுகத்தில் இரு மீனவர் குழுக்களுக்கு இடையே இடம்பெற்ற மோதலில் மூவர் வெட்டுக்காயங்களுடன் திருகோணமலை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாக சீனக்குடா பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த மோதலில் காலி, அம்பலாங்கொட பகுதியைச் சேர்ந்த 30 மற்றும் 40 வயதுடையவர்கள் படுகாயமடைந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று (04) அதிகாலை திருகோணமலை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட மூவரில் இருவர் வைத்தியசாலையிலிருந்து சொந்த விருப்பத்தில் வைத்தியசாலை தரப்பினருக்கு தகவல் வழங்காமல் வைத்தியசாலையை விட்டு வெளியேறியுள்ளதாகவும் வைத்தியசாலை பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, குறித்த மோதல் தொடர்பில் அதே பகுதியைச் சேர்ந்த 46 மற்றும் 47 வயதுடையவர்களை கைதுசெய்துள்ளதாக சீனக்குடா பொலிஸார் குறிப்பிட்டனர்.

கைதுசெய்யப்பட்ட குறித்த சந்தேக நபர்களை திருகோணமலை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் சீனக்குடா பொலிஸார் தெரிவித்தனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# மட்டக்களப்பில் வெளிநாட்டுக்கு அனுப்பும் போலி முகவர் கைது; 3 பேர் தப்பியோட்டம்!

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பில் ஐரோப்பிய நாடுகளுக்கு அனுப்புவதாக தெரிவித்து பலரிடம் பண மோசடியில் ஈடுபட்டு தலைமறைவாகிவந்த போலி முகவர் நகர்ப் பகுதியிலுள்ள வாடகை அறையில் தங்கியிருந்தபோது, பொதுமக்கள் அங்கு முற்றுகையிட்டு, போலி முகவரை மடக்கிப்பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்ததுடன், அவருடன் இருந்த 3 உதவி முகவர்கள் தப்பியோடியுள்ள சம்பவம் நேற்று முன்தினம் (3) காலையில் இடம்பெற்றுள்ளதாக மட்டு. தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பில் வாழ்ந்துவரும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 32 வயதுடைய இவர், ஐரோப்பிய நாடுகளுக்கு சட்டரீதியாக அனுப்புவதாகவும் சுவிஸ் நாட்டுக்கு அனுப்ப முதலில் 15 இலட்சம் தேவை எனவும் அங்கு சென்று பின்னர் வேலைசெய்து மிகுதி பணத்தை செலுத்த முடியுமெனவும் தெரிவித்து, ஆரம்பகட்டமாக விசா ஏற்பாட்டிற்கு பணம் தேவையென இருவரிடம் 4 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாவை பணத்தை வாங்கிவிட்டு தலைமறைவாகி வந்துள்ளார்.

இந்நிலையில், மட்டு. நகரிலுள்ள அறை வாடகைகளுக்கு கொடுக்கப்படும் விடுதி ஒன்றில், வெளிநாடு அனுப்புவதாக பணத்தை வாங்கி ஏமாற்றிய முகவர் தங்கியுள்ளதாக பாதிக்கப்பட்டவர்களுக்கு தகவல் கிடைத்தையடுத்து அந்த விடுதியை சம்பவதினமான நேற்று காலை முற்றுகையிட்டனர். அப்போது முகவருடன் இருந்த மட்டக்களப்பு சப் முகவர்கள் 3 பேர் அங்கிருந்து தப்பியோடியுள்ள நிலையில் முகவரை மடக்கிப்பிடித்து பொலிஸாருக்குத் தெரியப்படுத்தினர்.

இதனையடுத்து பொலிஸார் போலி முகவரை கைது செய்து விசாரணைகளை மேற் கொண்டுவருவதாகவும் அதன் பின்னர் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, குறிப்பாக அவுஸ்திரேலியா, கனடா, மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு அனுப்புவதாக பல போலி முகவர்களிடம் பலர் பணத்தை கொடுத்து ஏமாந்த நிலையில் முறைப்பாடு செய்துள்ளனர். எனவே, பொதுமக்கள் இவ்வாறான போலி முகவர்கள் தொடாபாக விழிப்பாக இருக்குமாறும் அவர்களுக்கு பணத்தை கொடுத்து ஏமாறவேண்டாமென பொலிஸார் கேட்டுள்ளனர்.

# திருமலையில் புதையல் தோண்டிய அறுவர் கைது

(அப்துல்சலாம் யாசீம்)


திருகோணமலை - அபயபுர பகுதியில் புதையல் தோன்றிய குற்றச்சாட்டின்பேரில் தொல்பொருள் திணைக்கள உத்தியோகத்தர் உட்பட ஆறுபேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

திருகோணமலை பிராந்திய குற்றத்தடுப்புப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து அபயபுர, லெனின் மாவத்தையில் நேற்று முன்தினம் (03) வீடொன்றில் புதையல் தோண்டி கொண்டிருந்தபோது வீட்டு உரிமையாளர் உட்பட ஆறுபேரை கைதுசெய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்கள் கந்தளாய், காலி, மீகமுவ மற்றும் அம்பாறை தீகவாபி பகுதிகளைச் சேர்ந்த 22, 24, 28, 35 வயதுடையவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். கைதுசெய்யப்பட்ட குறித்த சந்தேக நபர்கள் ஆறு பேரையும் திருகோணமலை நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் விசாரணைகளை உப்புவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

# கரை வலைகளில் சிக்கும் சுறா, பாறை மீன்கள்

### அம்பாறை - கல்முனை மீனவர்களுக்கு மகிழ்ச்சி





(அம்பாறைநிருபர்)

திடீர் காலநிலை மாற்றம் காரணமாக பாரிய மீன்கள் அம்பாறை மாவட்டத்தின் கல்முனை பிராந்திய கடற்கரைகளில் பிடிபடுகின்றன.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் 3 வகையான பாரிய பாறை மீன்கள், வளையா மீன்கள், சுறா மீன்கள் என கரைவலைகள் மூலம் பிடிக்கப்பட்டு பல இலட்சம் வரை விற்பனை செய்யப்பட்டுள்ளது.

கடந்த சில நாட்களாக இவ்வாறு மருதமுனை, சாய்ந்தமருது மற்றும் கல்முனை பகுதிகளில் பாறை இன மீன்கள் அதிகளவாக கரைவலைகளுக்கு பிடிக்கப்பட்டு, விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

குறித்த பாறை மீன் ஒன்றின் பெறுமதி சுமார் 1500 ரூபா முதல் 1800 வரை விற்பனையாவதுடன், இதேவேளை இவ்வாறு பிடிக்கப்படும் மீன்களினால் ஒரு மீனவரின் நாள் வருமானமாக 10 முதல் 20 இலட்சமாகவும் உள்ளமை குறிப்பிடத்தக்கது. தற்போது மருதமுனை, கல்முனை கடற்கரையில் கரைவலை மற்றும் ஆழ்கடல் மீன்பிடி தூண்டில் என்பன தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்ற நிலையில், கரைவலை மீனவர்களுக்கு இவ்வாறான பாரிய மீன்கள் தொகுதியாக பிடிபடுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதேவேளை, மலிவான விலையில் கிளவாலட வளையா போன்ற மீன்கள் விற்பனை செய்யப்படுகின்றன. இதன்படி வளையா மீன் 1 கிலோ 400 ரூபாவாகவும் கிளவால் 1 கிலோ 600 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகிறது.

# மூதூர் 64 ஆம் கட்டை பகுதியில் மீன்பிடி பூனையொன்று மீட்பு



(பாறுக் ஷிஹான்)

மீன்பிடி பூனை என அழைக்கப்படும் அரிய வகை புலி இனம் திருகோணமலை மூதூர் 64ஆம் கட்டை ஜபல் நகர்ப் பகுதியில் பிடிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு பிடிக்கப்பட்ட இப்பூனை வனஜீவராசிகள் திணைக்களத்தில் ஒப்படைக்கப்பட்டது.

மேலும், இப்பகுதியில் நீண்டகாலமாக வீடுகளிலுள்ள கோழி உள்ளிட்ட வளர்ப்புப் பிராணிகளை வேட்டையாடி வந்த நிலையில், பொதுமக்களினால் கடந்த வெள்ளிக்கிழமை (02) பிடிக்கப்பட்டு வனஜீவராசிகள் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இப்பூனையால் தாம் பல்வேறு அச்சுறுத்தலுக்கு உள்ளாகியதாக பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

இந்த மீன்பிடிப் பூனை இலங்கையில் கொடுப்புலி என அழைக்கப்படுவதுடன், ஒரு நடுத்தர காட்டுப்பூனையாக குறிப்பிடப் படுகின்றது. இவை தென் மற்றும் தென்கிழக்கு ஆசியாவில் காணப்படுகின்றன.

# ஹெரோயின் – ஐஸுடன் வாழைச்சேனையில் ஒருவர் கைது

(மீராவோடை நிருபர்)

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிறைந்துறைச்சேனை பகுதியில் 42 வயது பெண்ணொருவர் நேற்று முன்தினம் (3) கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடி விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைத்த தகவலுக்கமைய குறித்த பெண் கைதுசெய்யப்பட்டுள்ளார்.


கைதுசெய்யப்பட்ட பெண்ணிடமிருந்து ஹெரோயின் போதைப்பொருள் 08 கிராம் மற்றும் ஐஸ் போதைப்பொருள் ஆயிரத்து 400 மில்லி கிராம் என்பன கைப்பற்றப்பட்டுளன.

கைதுசெய்யப்பட்ட பெண்ணை வாழைச்சேனை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த வாழைச்சேனை பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# உப்புவெளி சுகாதார வைத்திய அதிகாரிகளால் இரவுநேர உணவகங்கள் திடீர் பரிசோதனை

## இரு உணவக உரிமையாளர்கள் மீது சட்ட நடவடிக்கை







(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை, உப்புவெளி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தினால் இரவு நேர ஹோட்டல்கள் திடீர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் தெரிவித்துள்ளது.

உணவுப் பாதுகாப்பு வாரத்தை முன்னிட்டு திருகோணமலை மாவட்டத்தில் உணவகங்கள் அனைத்தும் சோதனைக்கு உட்படுத்தப்படவுள்ள நிலையில், நேற்று முன்தினம் (03) உப்புவெளி பிரதேசத்திலுள்ள இரவுநேர உணவகங்கள் அனைத்தும் திடீர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும், மனித நுகர்வுக்குப் பொருத்தமற்ற உணவுகள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் மேலும் சில உணவுகள் அழிக்கப்பட்டுள்ளதாகவும் உப்புவெளி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

அலஸ்தோட்டம், செல்வநாயகபுரம் மற்றும் மூன்றாம் கட்டை பகுதிகளில் இயங்கிவரும் இரவுநேர உணவகங்கள் சில சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ள நிலையில், இரண்டு உணவகங்கள்மீது சட்ட நடவடிக்கைகள் தொடர நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் உப்புவெளி சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.சையொழிபவன் தெரிவித்தார்.

அத்துடன், கொரோனா முடிவடைந்ததையடுத்து திருகோணமலை நகர்ப்புர ஹோட்டல்கள் தொடர்பில் பல முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும், எதிர்வரும் காலங்களில் ஹோட்டல்களை சோதனையிடவுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# கல்முனை அல்-ஹாமியா அரபுக் கல்லூரியின் 6ஆவது பட்டமளிப்பு விழா




(மாவடிப்பள்ளி, மாளிகைக்காடு நிருபர்கள்)

கல்முனை அல்-ஹாமியா அரபுக்கல்லூரியின் 6ஆவது பட்டமளிப்பு விழா மன்னர் பைசல் கேட்போர் கூடத்தில் அரபுக் கல்லூரி அதிபர் ஏ.சி தஸ்தீக் மதனி தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பேராதனைப் பல்கலைக்கழக அரபு மற்றும் இஸ்லாமிய கற்கைகள் பிரிவின் பேராசிரியரும் இக்கல்லூரியின் பழைய மாணவருமான கலாநிதி எம்.எஸ்.எம்.சலீம் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டதுடன், கௌரவ அதிதியாக கல்லூரியின் ஆளுநர் சபைத் தலைவர் சட்டத்தரணி ஆரிப் சம்சுதீன் கலந்துகொண்டார்.

பட்டமளிப்பு விழாவையொட்டி நினைவு மலரொன்றும் வெளியிட்டு வைக்கப்பட்டது. நூல் அறிமுக உரையை கல்லூரியின் பழைய மாணவர் சங்கத் தலைவர் ஏ.எல்.நாஸிர் கனி ஹாமி நிகழ்த்தினார்.

இங்கு 105 மௌலவிகளுக்கும் 23 ஹாபிழ்களுக்கும் பட்டம் வழங்கிவைக்கப்பட்டது. தமது திறமைகளை வெளிப்படுத்திய இக்கல்லூரியின் பழைய மாணவர்கள் சிலரும் இக்கல்லூரியின் வளர்ச்சிக்குப்பங்காற்றிய முன்னாள் அதிபர்கள் மற்றும் ஆளுநர் சபை உறுப்பினர்கள் சிலரும் இங்கு பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் உலமாக்கள், புத்திஜீவிகள், இக்கல்லூரியின் பழைய மாணவர்கள், பட்டம் பெறும் மாணவர்களின் பெற்றோர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் பேராசிரியரும் இக்கல்லூரியின் பழைய மாணவருமான கலாநிதி எம்.எஸ்.எம்.சலீமும் பாராட்டி கௌரவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

கிழக்கு
செய்திகள்
eastthamilan@gmail.com

# கந்தளாய் சீனிபுரப் பகுதியில் துப்பாக்கி தோட்டாக்கள் மீட்பு



(கந்தளாய் நிருபர்)

கந்தளாய் அக்போபுர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சீனி புர பகுதியில் ஆயுதங்களுக்கு பயன்படுத்தும் தோட்டாக்கள் நேற்று முன்தினம் (03) மீட்கப்பட்டுள்ளதாக அக்போபுர பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சீனிபுரப் பகுதியில் சிறுவர்கள் விளையாடிக் கொண்டிருந்தவேளையில் சந்தேகத்துக்குரிய குழாய் ஒன்றிலிருந்து தோட்டாக்கள் இருந்துள்ளன. அதனை சிறுவர்கள் பெற்றோருக்கு தெரியப்படுத்திய பின் அக்போபுர பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டு மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

T56 தோட்டாக்கள் 152, துப்பாக்கி 04, தோட்டாக்கள், 84எஸ் 04 தோட்டாக்கள், 9 எம்.எம்.துப்பாக்கியின் தோட்டாக்கள் 20, சைலன்சர் 01, SLR(எஸ்எல்ஆர்) துப்பாக்கி தோட்டாக்கள் 03 ஆகியன மீட்கப்பட்டுள்ளன.

அக்போபுர குற்றத்தடுப்புப் பொலிஸார் அனைத்தையும் மீட்டதுடன், இது குறித்து மேலதிக விசாரணை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# காரைதீவில் டெங்கு நுளம்பு பெருகும் இடங்களுக்கு சிவப்பு அறிவித்தல்



(மாளிகைக்காடு நிருபர்)

காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் தஸ்ஸீமா வசீர் தலைமையில் காரைதீவு - 06 மற்றும் மாவடிப்பள்ளி பிரதேசத்தில் விசேட டெங்கு கள பரிசோதனை நடைபெற்றன. இதன்போது பரிசோதனை செய்யப்பட்ட 377 வீடுகளில் டெங்கு நுளம்பு பெருகக்கூடிய இடங்களை வைத்திருந்த 05 வீடுகள் 02 வெற்றுக் காணிகளுக்கு சிவப்பு அறிவித்தல்களும் வழங்கப்பட்டுள்ளன.

சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் தஸ்ஸீமா வசீர் பொதுமக்களுக்கு அதிகமாக நுளம்புகள் பெருக்கம் இடங்கள் சம்பந்தமான விடயங்களையும், டெங்கின் தாக்கத்தினால் ஏற்படும் அசௌகரியங்கள் தொடர்பிலும் இதன்போது விளக்கினார்.

இந்த விசேட டெங்கு கள பரிசோதனையில் காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், வைத்திய அதிகாரி காரியாலய உத்தியோகத்தர்கள் மற்றும் நுளம்பு களத் தடுப்புப் பிரிவினர்கள், காரைதீவு பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கிராமசேவையாளர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் இணைந்து டெங்கு தள தடுப்புப் பரிசோதனையில் கலந்துகொண்டனர்.

# ஒன்லைன் பணப்பரிமாற்றத்தில் கைபேசிகளை கொள்வனவுசெய்து மோசடி

## வாழைச்சேனையில் இளம் கணவன் மனைவி கைது

(கனகராசா சரவணன்)

மட்டுக்களப்பு, வாழைச்சேனை பிரதேசத்தில் 7 கையடக்கத் தொலைபேசி விற்பனை நிலையங்களில் போலியான எப்மூலம் ஒன்லைன் எனப்படும் இயங்கலை மூலம் பணப்பரிமாற்றம் ஊடாக பல இலட்சம் ரூபா பெறுமதியான கையடக்கத் தொலைபேசிகளை கொள்வனவுசெய்து மோசடியில் ஈடுபட்டுவந்த பொலன்னறுவையைச் சேர்ந்த இளம் கணவன், மனைவி ஆகிய இருவரை நேற்று முன்தினம் சனிக்கிழமை (03) கைதுசெய்துள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை பிரதேசத்திலுள்ள பல கையடக்கத் தொலைபேசி விற்பனை நிலையங்களுக்கு கணவன், மனைவி ஜோடியாகச் சென்று பெறுமதியான கையடக்கத் தொலைபேசிகளை கொள்வனவு செய்துகொண்டு அதற்கான பணத்தை தமது போலியான கையடக்கத் தொலைபேசி எப் ஒன்லைன் எனப்படும் இயங்கலை மூலம் விற்பனை நிலையத்துக்கு பணப்பரிமாற்றம் இடம்பெற்றுள்ளதாக காட்டிவிட்டு கையடக்கத் தொலைபேசியை வாங்கிக்கொண்டு மோசடியில் ஈடுபட்டுவந்துள்ளனர்.

இந்நிலையில், குறித்த கையடக்கத் தொலைபேசி நிலையத்தின் வங்கிக்கணக்கில் உண்மையில் பணப்பரிமாற்றம் இடம்பெறவில்லை. இது போலியான பணப்பரிமாற்றம் என கண்டறிந்து பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததையடுத்து பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் பொலன்னறுவை கட்டின்வில பிரதேசத்தைச் சேர்ந்த 26, 21 வயதுடைய இளம் கணவன் - மனைவி ஆகிய இருவரை கைதுசெய்தனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்வர்கள் மோசடியாக கொள்வனவுசெய்த தொலைபேசிகளை பொலன்னறுவை கல்வல பிரதேசத்திலுள்ள அவர்களது உறவினர் கையடக்கத் தொலைபேசி நிற்பனை நிலையத்துக்கு வழங்கிவந்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள 7 கையடக்கத் தொலைபேசி விற்பனை நிலையங்களில் பல இலட்சம் ரூபா பெறுமதியான கையடக்கத் தொலைபேசிகளை மோசடி செய்துள்ளதாக கைதுசெய்யப்பட்ட இவர்களுக்கு எதிராக முறைப்பாடு கிடைத்துள்ளது.

அதேவேளை, கல்முனை மூதூர் பிரதேசங்களிலிருந்தும் தொலைபேசி ஊடாக பலர் முறைப்பாடு தெரிவித்துள்ளனர். இதில் கைதுசெய்யப்பட்டவர்களிடம் விசாரணையின் பின்னர் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# கிழக்குப் பல்கலையின் கலை, கலாசார பீடத்திற்குப் புதிய பீடாதிபதி தெரிவு

(கல்லடி நிருபர்)



கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை, கலாசார பீட புதிய பீடாதிபதியாக தெரிவுசெய்யப்பட்ட கலாநிதி வ.குணபாலசிங்கம் கடந்த வெள்ளிக்கிழமை (02) தனது கடமையைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

கிழக்குப் பல்கலைக்கழக இந்து நாகரீகத்துறையின் முதுநிலை விரிவுரையாளரும், தலைவராகவும் இவர் செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு பல்கலைக்கழக கலை, கலாசார பீடத்தில் கல்வி பயின்ற முதல் கலை, கலாசார பீடாதிபதி இவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, மட்டக்களப்பு துறைநீலாவணையைச் சேர்ந்த கலாநிதி செ.அரசரெத்தினம் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் இரசாயனத் துறையில் பேராசிரியராக பதவி உயர்வு பெற்றுள்ளார்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை நியமங்களுக்கமைய திறமை அடிப்படையில் பேராசிரியர் பதவி உயர்வுக்காக விண்ணப்பித்த கலாநிதி செ.அரசரெத்தினத்தின் விண்ணப்பங்களை மதிப்பீடு செய்த மூதவையினால் விதந்துரைக்கப்பட்ட துறைசார் நிபுணர்களின் மதிப்பீட்டு அறிக்கைகள், நேர்முகத் தேர்வு முடிவுகள் ஆகியன சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. அவற்றின் அடிப்படையிலேயே இவர் பேராசிரியராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் முதலாவது இரசாயனவியல் துறை சிறப்புப் பட்டதாரி என்பது குறிப்பிடத்தக்கது.

# கூட்டுறவுச் சங்கங்கள் சமூகப் பணிகளிலும் ஈடுபட வேண்டும்

## கிழக்கு மாகாண கூட்டுறவு ஆணையாளர் சிவலிங்கம் தெரிவிப்பு

(பொத்துவில் நிருபர்)



கூட்டுறவுச் சங்கங்கள் குறிப்பிட்ட பணிகளுடன் அதன் செயற்பாடுகளை மட்டுப்படுத்திக்கொள்ளாது, சமூகநல வேலைத்திட்டங்களிலும் கவனம் செலுத்த வேண்டுமென கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும், மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளருமான என்.சிவலிங்கம் தெரிவித்தார்.

சம்மாந்துறை ஸபூர் சனச கூட்டுறவுச் சங்கத்தினால் அதன் அங்கத்தவர்களுக்கு உலருணவுப் பொருட்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (3) சங்கத்தின் காரியாலயத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.


அவர் மேலும் தெரிவிக்கையில்,

கூட்டுறவுச் சங்கங்கள் தொடர்பில் மக்கள் மத்தியில் தவறான அபிப்பிராயம் காணப்படுகிறது. மக்கள் மத்தியில் இருக்கும் பிழையான எண்ணங்களையும் சந்தேகங்களையும் கலைந்து தூய கூட்டுறவை ஏற்படுத்துவதற்கு சகலரும் உழைக்க வேண்டும்.

அதிகமான சொத்துகளுடன் மிகவும் பலமாக இருந்த எத்தனையோ சங்கங்கள் இன்று மிகக் குறைந்தளவிலான சொத்துகளுடன் நலிவடைந்து காணப்படுகின்றன. கூட்டுறவு சங்கங்கள் அங்கத்தவர்களுடைய சொத்தாகும். அதனைப் பேணிப் பாதுகாப்பது அவர்களுடைய கடமையாகும். சேற்றில் முளைத்த செந்தாமரைபோல் ஒருசிலர் மாத்திரமே இதனைப் பொறுப்பேற்று சரியான முறையில் வழிநடத்துகின்றனர் - என்றார்.

குறித்த நிகழ்வின்போது சங்கத்தின் அங்கத்தவர்கள் 100 பேருக்கு உலருணவுப் பொருட்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# இளைய தலைமுறையினருக்கான வழிகாட்டல் மாநாடு!


(நூருள் ஹுதா உமர்)


இளைய தலைமுறையினருக்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இளைஞர் வழிகாட்டல் மாநாடு நேற்று முன்தினம் (03) கல்முனை வலய நிந்தவூர் கமு/கமு/அல்-அஷ்ரக் தேசிய பாடசாலையின் காஸிமி கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் பாடசாலை அதிபர் ஏ.அப்துல் கபூரின் பங்களிப்புடன், அஸ்ஸெய்யத் றஸ்மி மௌலானாவின் ஒருங்கமைப்பில் கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சஹுதுல் நஜீமின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், சர்வதேச அளவில் புகழ்பெற்ற ஒலிபரப்பாளர் பி.எச்.அப்துல் ஹமீத் பிரதம அதிதியாகவும் பிரதம பேச்சாளராகவும் கலந்துகொண்டார்.

மேலும் இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வீ.ஜெகதீசன், அகில இலங்கை ஜம்மியதுல் உலமா சபை பொதுச்செயலாளர் அஷ்ஸெக் மௌலவி அர்கம் நூறாமித், முஸ்லிம் சமய பண்பாட்டாலுவல்கள் திணைக்களப் பிரதி பணிப்பாளர், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பிரதி பணிப்பாளர் வைத்தியர் எம்.பி.அப்துல் வாஜித், சம்மாந்துறை ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் ஆசாத் எம்.ஹனிபா, கல்முனை கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், பாடசாலை பழைய மாணவர் சங்கப் பிரதிநிதிகள், மாணவ தலைவர்கள், பிரதேச முக்கியஸ்தர்கள், கல்விமான்கள், சிவில் அமைப்புகளின் பிரதானிகள், புகழ்பெற்ற ஊடகவியலாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

கல்முனை கமு/கமு/அல்-அஸ்ஹர் பாடசாலையிலிருந்து மாணவ நாடாளுமன்றத்திற்கு தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளுக்கு இந்நிகழ்வில் வைத்து பாராட்டு சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன், காலமான புகழ்பெற்ற அறிவிப்பாளர் ஏ.ஆர்.எம்.ஜிப்ரி எழுதிய அறிவுக்களஞ்சியம் நூலும் இந்நிகழ்வில் வைத்து அன்னாரின் குடும்பத்தினரால் வெளியிட்டு வைக்கப்பட்டது.

# போடியார் புலம்பல்!



**பேச்சுமூலம் தீர்வு என்பது கானல் நீர் கனவாகப் போகுதாம் எண்டு சம்பந்தரு சொல்லிப்போட்டாரு எலுவா?**

**அவருக்கு தெரியும் இந்த குள்ளநரி ரணில் ஒண்டுமே புடுங்கப்போறல்ல. பேச்சு எண்டு சொல்லி இன்னும் நல்லாட்சில விட இந்த நரியாட்சில ஒண்டுமே கிடைக்கா.. எண்டது நல்லா சம்பந்தருக்கு இப்பதான் விளங்கி இருக்கு.. இது மற்றவங்களுக்கு விளங்காம இருக்கிறதுதான் கவலை. கானல் நீருக்கும் பறவை வரும்.. காகிதப்பூவுக்கும் வண்டு வரும்!**

# FIFA WORLD CUP - 2022

## காலிறுதி ஆட்டத்தில் சனியன்று ஆர்ஜென்ரீனா - நெதர்லாந்து அணிகள் பலப்பரீட்சை



## அமெரிக்காவை பந்தாடி மீண்டுமொரு முறை காலிறுதிக்குள் நுழைந்த நெதர்லாந்து



ரவுண்ட ஒவ் 16 சுற்றில் முதல் ஆட்டத்தில் அமெரிக்காவை 3-1 என்ற கோல் கணக்கில் வீழ்த்திய நெதர்லாந்து அணி, 2014ஆம் ஆண்டின் பின்னர் மீண்டுமொரு முறை காலிறுதி சுற்றுக்குத் தகுதிபெற்றுள்ளது.

தொடர்ந்து 19 ஆட்டங்களில் வெற்றிவாகை சூடிய அணியாக திகழும் நெதர்லாந்து, நேற்று முன்தினம் கலிபா மைதானத்தில் நடைபெற்ற முதல் நொக் அவுட் சுற்று ஆட்டத்தில் அமெரிக்காவை எதிர்கொண்டது. தொடக்கம் முதல் ஆதிக்கம் செலுத்திய நெதர்லாந்து வீரர்கள் சரமாரியாக அமெரிக்க கோல் பகுதியை முற்றுகையிட்டனர். இதன் பலனாக 10ஆவது நிமிடத்தில் மெம்ஃபிஸ் டிபே முதல் கோலை அடித்தார். முதல் பாதி ஆட்டம் முடிவடைய சிறிதுநேரத்தில் 43ஆவது நிமிடத்தில் டேலி பிளைன்ட் அற்புதமாக கோலடித்தார். இதனால் 2-0 என முன்னிலை பெற்றது நெதர்லாந்து. சில கோல் போடும் வாய்ப்புகளை நெதர்லாந்து வீரர்கள் வீணடித்தனர். அமெரிக்க அணி தரப்பில் 76ஆவது நிமிடத்தில் ஹாஜி ரைட் அபாரமாக கோலடித்தார்.

மீண்டும் நெதர்லாந்து தரப்பில் டேலி பிளைன்ட் அனுப்பிய பாஸை பயன்படுத்தி 81ஆவது நிமிடத்தில் தனது அணிக்கு 3ஆவது கோலை அடித்தார் டம்பிரைஸ். இறுதியில் 3-1 என்ற கணக்கில் நெதர்லாந்து காலிறுதிக்கு தகுதிபெற்றது. உதைபந்து உலகில் வலுவான அணிகளில் ஒன்றான நெதர்லாந்து இதுவரை ஒருமுறை கூட உலக சம்பியன் பட்டத்தை வெல்லவில்லை.

1974, 1978, 2010ஆம் ஆண்டு உலகக்கிண்ணத் தொடர்களின் இறுதி ஆட்டத்தில் தோல்வியடைந்து இரண்டாமிடத்தைக் கைப்பற்றியுள்ளது. மேலும் கடந்த 2014ஆம் ஆண்டு மூன்றாமிடத்தைப் பிடித்தது.

## ஜாம்பவான் மரடோனாவின் சாதனையை முறியடித்த மெஸ்ஸி



ஆர்ஜென்ரீன உதைபந்து ஜாம்பவான் என அழைக்கப்படும் மறைந்த டியாகோ மரடோனாவின் சாதனையை சக நாட்டு வீரர் லியோனல் மெஸ்ஸி முறியடித்துள்ளார். நேற்று ஆஸி. அணியுடன் நடைபெற்ற ரவுண்ட் ஒவ் 16 சுற்று ஆட்டத்தில் அவர் இந்த சாதனையை முறியடித்தார்.

ஆர்ஜென்ரீனா அணி சார்பில் உலகக் கிண்ணத்தில் 21 ஆட்டத்தில் 8 கோல்கள் அடித்துள்ளார் மரடோனா. ஆர்ஜென்ரீனா அணியின் தற்போதைய அணித்தலைவரான நட்சத்திர வீரர் லியோனல் மெஸ்ஸி 35ஆவது நிமிடத்தில் கோல் அடித்தார். இதன்மூலம் பீபா உலகக்கிண்ணத்தில் 9 கோல்களை (22 ஆட்டம்) அடித்த வீரர் என்ற பெருமையை பெற்றார்.

உலகக்கிண்ணத்தில் அதிக கோல்கள் அடித்த ஆர்ஜென்ரீனா வீரர் கேப்ரியல் பாடிஸ்டுடா ஆவார். அவர் 10 கோல்களை அடித்துள்ளார். இவருக்கு அடுத்தபடியாக இருக்கும் மெஸ்ஸி, இந்தத் தொடரிலேயே அந்த சாதனையை முறியடிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.


### இன்றைய போட்டிகள்

ஜப்பான் VS குரேஷியா இரவு 8.30

பிரேசில் VS தென்கொரியா நள்ளிரவு 12.30

FIFA WORLD CUP Qatar2022

## காலிறுதிக்கு தகுதிபெற்ற ஆர்ஜென்ரீனா: மெஸ்ஸியின் கனவு நனவாகுமா ?



அகமட் பின் அலி ஸ்டேடியத்தில் இலங்கை நேரப்படி நேற்று நள்ளிரவு நடைபெற்ற நொக் அவுட் சுற்று ஆட்டத்தில் அவுஸ்திரேலியாவை வீழ்த்திய ஆர்ஜென்ரீனா அணி காலிறுதிக்கு முன்னேறியது.

ஆட்டத்தின் 35ஆவது நிமிடத்தில் நட்சத்திர வீரர் மெஸ்ஸி கோல் அடித்து தனது அணிக்கு முதல் பாதியில் முன்னிலை பெற்றுக் கொடுத்தார். இரண்டாவது பாதியின் 57ஆவது நிமிடத்தில் ஆர்ஜென்ரீனாவின் ஜூலியன் அல்வாரெஸ் கோல் அடித்தார். பின்னர் ஆட்டத்தின் 77ஆவது நிமிடத்தில் அவுஸ்திரேலியா தரப்பில் என்சோ பெர்னாண்டஸ் கோல் அடித்தார். இறுதியில் ஆர்ஜென்ரீனா 2-1 என்ற கோல் கணக்கில் அவுஸ்திரேலியாவை வீழ்த்தி காலிறுதிச் சுற்றுக்குத் தகுதி பெற்றது.

கடந்த 2018ஆம் ஆண்டு ரவுண்ட் ஒவ் 16 சுற்றுடன் வெளியேறிய ஆர்ஜென்ரீனா அணி இம்முறை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது. கடந்த 2014ஆம் ஆண்டு இரண்டாமிடத்தைப் பெற்ற ஆர்ஜென்ரீனா நட்சத்திர வீரர் மெஸ்ஸியின் இறுதி உலகக்கிண்ணத்துடன் சம்பியன் பட்டத்தை கைப்பற்ற வேண்டும். என்ற முனைப்பில் உள்ளது.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

## வாழ்வின் இறுதிக்கட்டத்திற்கு சென்ற ஜாம்பவான் பீலே

உதைபந்து ஜாம்பவனான 81 வயதாகும் பிரேஸிலைச் சேர்ந்த பீலேவின் உடல்நிலை மோசமாகியுள்ளதாகவும் அவரின் உடல் கீமோதெரபி சிகிச்சைக்கு ஒத்துழைக்கவில்லை எனவும் தகவல் வெளியாகியுள்ளது.

கடந்த ஆண்டு அவருக்கு பெருங்குடல் அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. மேலும், புற்றுநோய் பாதிப்பு இருந்த நிலையில், கடந்த 2021 செப்டெம்பர் முதல் கீமோதெரபி சிகிச்சை எடுத்து வந்தார் பீலே. கடந்த சில நாட்களாக அவரின் உடல்நிலை பலவீனமடைந்தது.

இதனால் வைத்தியசாலை ஒன்றில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார்.

அங்கு, கீமோதெரபி சிகிச்சை அளிக்கப்பட்டுவந்த நிலையில், தொடர்ந்து அவரின் உடல்நலம் தேறாமல் இருந்து வந்தது. தற்போது, அவரின் உடல் கீமோதெரபி சிகிச்சைக்கு ஒத்துழைக்கவில்லையென தகவல் வெளியாகியுள்ளது. இதனால் பலியேட்டிவ் கேர் எனப்படும் இறுதிக்கட்ட சிகிச்சை அளிக்கும் பிரிவுக்கு அவர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.



வாழ்க்கையின் இறுதிக்கட்ட சிகிச்சையானது, உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் நோய்களுக்கு அளிக்கப்படும். அவருக்கு அளிக்கப்பட்டுவரும் கீமோதெரபி சிகிச்சை நிறுத்தப்பட்டு, வலி மற்றும் மூச்சுத்திணறல் போன்ற அறிகுறிகளுக்கு மட்டுமே சிகிச்சை அளிக்கப்படும் நோய்த்தடுப்பு சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என்றும் சொல்லப்படுகிறது. இதனால் கால்பந்து உலகம் சோகத்தில் மூழ்கியுள்ளது.

1940ஆம் ஆண்டு பிறந்த பீலே பிரேஸில் நாட்டைச் சேர்ந்த தொழில்முறை கால்பந்தாட்ட வீரர். உதைபந்தாட்ட உலகின் மாபெரும் ஜாம்பவனாக இன்றும் விளங்குபவர். 1200இற்கும் மேற்பட்ட கோல்கள் மட்டுமன்றி ஹாட்ரிக் கோல்களில் உலக சாதனையும் படைத்துள்ளார்.

உலகக்கிண்ண வரலாற்றில் அதிக வெற்றிகளைக் குவித்த வீரர் என்ற பெருமையை பிரேஸில் ஜாம்பவான் பீலே பெற்றுள்ளார். பீலே தனது முதல் உலகக்கிண்ணத்தை 1958இல் சுவீடனில் வென்றார், இது பிரேஸிலின் முதல் கிண்ணமாகும். பின்னர் 1962இல் பிரேஸில் வெற்றிபெற உதவினார், இறுதியாக 1970இல் தனது அணியை வெற்றி மேடைக்கு அழைத்துச் சென்றார், அதுவே அவரது இறுதிப் போட்டியாகவும் அமைந்தது.

## நுவரெலியா மாவட்டத்திற்கு...

04ஆம் பக்கத் தொடர்ச்சி

புதிய பிரதேச செயலகங்கள் உருவாக்கப் பட்டுள்ள போதிலும் புதிய பிரதேச செயலகங்களில் அதிக மக்கள் தொகை உள்ளது

நோர்வூட் - கிராமசேவகர் பிரிவுகள் 35 - சனத்தொகை 1,75, 436.

தலவாக்கலை - கிராமசேவகர் பிரிவுகள் 44 - சனத்தொகை 1,57,115.

எனவே, நுவரெலியா மாவட்டத்திற்கு மொத்தம் 14 பிரதேச செயலகங்கள் உருவாக்கப்பட வேண்டும். இதனூடாக, நுவரெலியா மாவட்டத்தி லுள்ள அனைத்து மக்களின் நிர்வாகத் தேவைகளையும் இலகுவாக செய்துகொள்ள முடியும்.

மேலும், தற்போது உள்ளூராட்சி எல்லை நிர்ணயம் குறித்து அதிகம் பேசப்படுகிறது. எல்லை நிர்ணய சபை உறுப்பினர்களில் மலையக மக்களை பிரநிதித்துவப்படுத்தி ஒருவர் நியமிக்கப்படவில்லை என்பதை இந்த சபையில் நான் சுட்டிக்காட்டியிருந்தேன். அது தொடர்பில் இன்றுவரை சாதகமான பதில்கள் எதுவும் கிடைக்கவில்லை.

அத்துடன், நுவரெலியா மாவட்டத்தில் உள்ளூராட்சி சபைகளுக்கான எல்லை பிரிக்கப்படுவதற்கு முன்னர் கிராமசேவகர் பிரிவுகளின் எல்லை பிரிக்கப்பட வேண்டும். காரணம், இலங்கையிலுள்ள ஏனைய கிராம சேவகர் பிரிவுகளில் ஐயாயிரம் வரையான மக்கள் தொகையினரே உள்ளனர். ஆனால், நுவரெலியா மாவட்டத்தில் கிராம சேவகர் பிரிவுகளில் சுமார் ஐயாயிரம் வரையான மக்கள் தொகையினரும் உள்ளனர். உதாரணமாக,கோர்கஸ்வோல்ட் கிராம சேவகர் பிரிவில் பத்தாயிரத்திற்கும் அதிகமான மக்கள் உள்ளதை நாம் பல சந்தர்ப்பங்களில் சுட்டிக்காட்டியுள்ளோம்.

எனவே, உடனடியாக நுவரெலியா மாவட்டத்தில் கிராம சேவகர் பிரிவுகளை எல்லை நிர்ணயம் செய்ய விசேட குழுவொன்றை நியமிக்குமாறு கௌரவ பிரதமர் மற்றும் அமைச்சரிடம் வினயமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

13ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை பறிக்கும் வகையில் தொடர்ச்சியாக மாகாண சபைத் தேர்தல் பிற்போடப்பட்டு வருகிறது. அதற்குப் பதிலாக, காலனித்துவ ஆட்சிபோன்று ஆளுநர்களுக்கு முழு அதிகாரமளித்து - மாகாண சபைகளை செயலிழக்கச் செய்யும் திட்டத்தை அரசாங்கம் முன்னெடுத்து வருகிறது.

இந்நிலையில், தற்போது 13+ பற்றி பேசப்படு கிறது இதன்மூலமாவது அதிகாரப்பகிர்வின் ஊடாக நாட்டில் கரைபுரையோடியிருக்கும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும் என நம்புவோமாக இதற்கு முழு ஆதரவையும் வழங்குவோம்

ஆனால், தேர்தல் முறைமை திருத்தம் என்ற போர்வையில் மாகாண சபைத் தேர்தல் பிற்போடப்பட்டுள்ளது.

அதுபோலவே, எல்லை நிர்ணயம் என்ற போர்வையில் உள்ளூராட்சி சபைத் தேர்தலையும் பிற்போட அரசாங்கம் முயற்சித்து வருகிறது.

ஆனால், தேர்தல் ஆணையம் மார்ச் மாதத்திற்குள் தேர்தலை நடத்த மும்முரமாக உள்ளது.

தற்போது தேர்தல் ஒன்றுக்குச் சென்றால் தோல்வி நிச்சயம் என்பதை நன்கு அறிந்து கொண்டு தோல்வி பயம் காரணமாக தேர்தலை பிற்போட முயற்சிக்கின்றனர்.

ஆகவே, அச்சம் இல்லை என்றால் மாகாண சபைத் தேர்தலையும் உள்ளூராட்சி சபைத் தேர்தலையும் உடனடியாக நடத்துமாறு அரசாங்கத்திற்கு சவால் விடுகிறேன்

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியால் இளைஞர், யுவதிகள் வேலை வாய்ப்பின்றி திண்டாடுகின்றனர். எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ள நிலையில், பலர் நாட்டை விட்டு வெளியேறுகின்றனர். மேலும் பலர் வெளியேறத் துடித்துக்கொண்டு இருக்கின்றனர். அவர்களுக்கு நம்பிக்கை தரும் வகையில் களம் அமைத்து சிறந்த எதிர்காலத்தை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

விளையாட்டுத்துறை அமைச்சின் கீழ் உள்ள தேசிய இளைஞர் படையணி, தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் போன்றன மிகவும் முக்கிய நிறுவனங்களாகும். இவற்றின் நிர்வாக விடயங்களை முன்கொண்டுசெல்வதற்கு இந்த வரவு-செலவுத் திட்டத்தில் மிகவும் குறைந்தளவான நிதியே ஒதுக்கப்பட்டுள்ளது.இதில் பல குறைபாடுகளும் குளறுபடிகளும் காணப்படுகின்றன.

இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் 1979ஆம் ஆண்டின் 69ஆம் இலக்க நாடாளுமன்ற சட்டத்தின் கீழ் ''தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்'' ஸ்தாபிக்கப்பட்டுள்ளதுடன், நாட்டின் ஒவ்வொரு மாவட்டங்களிலும் அலுவலகங்கள் திறக்கப்பட்டுள்ளன. 50இற்கும் மேற்பட்ட பயிற்சி நிலையங்கள் நாடளாவிய ரீதியில் காணப்படுகின்றன. ஆனால், இவை முழுமையான செயல்பாடின்றி காணப்படுகிறது.

இவற்றினூடாக இளைஞர், யுவதிகளுக்கு வழங்கப்படும் சேவை போதுமானதா என்பதை நாம் மீளாய்வு செய்து பார்க்க வேண்டும்.

இந்த இளைஞர் சேவைகள் மன்றம் உண்மையில் புதுப்பிக்கப்பட்டு காலத்திற்கு ஏற்றதுபோன்று அபிவிருத்தி செய்யப்பட வேண்டும்.

தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் 12 பணிப்பாளர்கள் சபை உறுப்பினர்களில் ஒரு தமிழர் கூட இல்லை என்பதை நான் இந்த இடத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இவ்வாறிருக்கையில், தமிழ் மக்கள் அதிகம் வாழும் மாவட்டங்களில் அந்த மக்களின் தேவை அறிந்து செயற்பாடுகளை எவ்வாறு முன்னெடுக்க முடியும் என கேள்வி எழுப்ப விரும்புகிறேன்.

அத்துடன், இளைஞர் நாடாளுமன்றம் என்ற ஒன்றை பெயரளவில் உருவாக்கியுள்ளனர். இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர்களாக தெரிவுசெய்யப்பட்டுள்ள இளைஞர், யுவதிகளுக்கு தங்கள் மாவட்டங்களில் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்க சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும்.

'விளையாட்டுத்துறை என்பது நல்லிணக்கத்தை ஊக்குவிக்கக்கூடிய சிறந்த இடமாகும்'. ஆனால், துரதிர்ஷ்டவசமாக இலங்கையில் விளையாட்டுத் துறையிலும் இனவாதம், பிரதேசவாதம், தலைதூக்கிப் பார்க்கிறது.

உதாரணமாக, மற்ற நாடுகளை எடுத்துக் கொண்டால் அதன் தேசிய அணியில் அனைத்துத் தரப்பினரையும் உள்வாங்கி வீரர்கள் தெரிவு இடம்பெறுகிறது.

இந்தியாவில், வடக்கே ஜம்மு-காஷ்மீர், பஞ்சாப் முதல் தெற்கே தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா முதல் அனைவருக்கும் வாய்ப்பு வழங்கப்படுகிறது. ஆனால், இலங்கை தேசிய கிரிக்கெட் அணியில் சிறுபான்மை தமிழ் பேசும் வீரர் ஒருவர் இடம்பிடிப்பது குதிரை கொம்பாக மாறியுள்ளது. இது ரசிகர்கள் மத்தியில் மிகுந்த கவலை மற்றும் ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

Little England சிறிய இங்கிலாந்து என அழைக்கப்படும் நுவரெலியாவில் சர்வதேச கிரிக்கேட் மைதானம் MINI LORDS ஒன்று அமைக்கப்படும் பட்சத்தில் அங்கு சர்வதேச மட்டத்திலான போட்டிகள் நடத்தப்பட்டு விளையாட்டுத்துறையுடன் இணைந்து சுற்றுலாத் துறையும் முன்னேற்றமடையும்.

அங்குள்ள காலநிலை, சூழ்நிலை என்பன சர்வதேச போட்டிகளை நடத்துவதற்கும், வெளிநாடுகளில் சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் போது திறம்பட செயல்பட, சாதிக்க உதவியாக இருக்கும்.

ஆசிய கிண்ணக் கிரிக்கெட் மற்றும் வலைபந்து ஆகியவற்றை வென்று நமது வீரர்கள் நாட்டுக்குப் பெருமை சேர்த்தது போல் தேசிய விளையாட்டான கரப்பந்தாட்டம் போன்றவற்றிலும் சர்வதேச அளவில் நாம் முன்னேற்றமடைய வேண்டும்.




Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7